# பேனா குரல்

# PENA KURAL


தமிழ் மாத இதழ்


Tamil Monthly

மலர்: 01 இதழ்: 10 ஆகஸ்ட் 2023 விலை: ₹ 20/-




## நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல பெண்கள்தலைமையிலான வளர்ச்சி அவசியம்: சுதந்திர தின உரையில் பிரதமர்


www.penakural.com



SEVA
SAMARPAN
SANRAKSHAN
Making of an
Education Superpower
PM-SHRI
SCHOOLS
Pradhan Mantri Schools
for Rising India
Upgradation & development of over 14,500 schools across the country
Showcase of all components of the NEP 2020
Lakhs of students to be benefitted
NEP - National Education Policy
Source- GoI

# பேனா குரல்

PENA KURAL — TAMIL MONTHLY

R.Dis. No.: 939/2022 **PENA KURAL** தமிழ் மாத இதழ்

மலர்: 01 இதழ்: 10 ஆகஸ்ட் 2023 விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-


**தலையங்கம்**

ஆசிரியர் குரல்

## தேர்வுகளில் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொள்கிறார்களா?

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (யுபிஎஸ்சி) நடத்தும் குடிமைப் பணித் தேர்வுகளில் தமிழகத்தைச் சேர்ந்தவர்களின் தேர்ச்சி விகிதம் குறைந்துவருகிறது. இந்த சரிவுக்கான காரணம் ஆய்வு செய்யப்பட வேண்டும். நடப்பு ஆண்டில் குடிமைப் பணித் தேர்வுகளில் தமிழக அளவில் முதலிடம் பிடித்தவரால், தேசிய அளவில் 107ஆவது இடத்தையே பிடிக்க முடிந்தது. கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னர் வரை, தமிழ்நாட்டில் இருந்து குடிமைப் பணித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் பல்வேறு மாநிலங்களிலும் திறமையான அதிகாரிகளாகப் பெயர் பெற்றனர். ஆனால், மத்திய அரசின் முக்கியமான பொறுப்பு களில் முன்புபோல தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை என்கிற குறைபாடு அதிகரித்து வருகிறது.

ஐஏஎஸ், ஐபிஎஸ், ஐஆர்எஸ் அதிகாரிகளைத் தேர்வு செய்வதற்காக குடிமைப் பணித் தேர்வுகளை யுபிஎஸ்சி நடத்திவருகிறது. இதில், கடந்த 2014ஆம் ஆண்டு அகில இந்திய அளவில் ஒட்டுமொத்த தேர்ச்சி விகிதத்தில் தமிழகத்தைச் சேர்ந்தவர்களின் பங்கு 11 சதவீதமாக இருந்தது. இது 2017இல் 7 சதவீதமாகவும், 2019இல் 6.69 சதவீதமாகவும் குறைந்தது. இது மேலும் சரிந்து 2020இல் 5 சதவீதமாக ஆகிவிட்டது. 2021இல் தேர்வில் பங்கேற்ற 685 பேரில் 27 பேர் மட்டுமே தேர்ச்சி பெற்றனர். மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது, தமிழகத்தில் தொடக்கக் கல்வி முதலே குழந்தைகளுக்கு ஊக்கம் அளிக்கப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. ஒன்று முதல் பிளஸ் 2 வரை பயிலும் 75 லட்சத்துக்கும் அதிகமான மாணவர்களுக்கு பாடநூல்கள், நோட்டு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இவர்களுக்குப் பேருந்துகளில் இலவசப் பயண சலுகையும் வழங்கப்படுகிறது.

கடந்த ஆண்டு பிளஸ் 1 பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாத சுமார் 40,000 மாணவர்கள் உள்பட 50,000 மாணவர்கள் 2023இல் நடைபெற்ற பிளஸ் 2 பொதுத் தேர்வை எழுதவில்லை. இவை ஒருபுறம் இருக்க, தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளில் மாணவர்களின் குறைவான தேர்ச்சி குறித்து மத்திய பள்ளிக் கல்வித் துறை செயலர் சஞ்சய் குமார் கூறியுள்ள கருத்து கவனத்தில் கொள்ளத்தக்கது. சிபிஎஸ்இ, மாநிலப் பாடத்திட்டம் என வெவ்வேறு பாடத் திட்டங்களில் பயிலும் மாணவர்களுக்கு இயற்பியல், வேதியியல், உயிரியல் போன்ற பாடங்களில் வேறுபாடு உள்ளது. இதனால், தேசிய அளவிலான தேர்வுகளில் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது என்கிறார் அவர்.

அதேபோன்று, பிளஸ் 2 வரையில் மனப்பாடம் செய்து புத்தகத்தில் உள்ளதை அப்படியே எழுதுவதை ஊக்கப்படுத்துவது நமது குறைபாடு. இதனால், குடிமைப் பணித் தேர்வுகளில் திறன் தேர்வு, நேர்முகத் தேர்வுகளில் பங்கேற்பவர்கள் திணறுகிறார்கள். நேர்முகத் தேர்வில் பங்கேற்கும் தமிழக மாணவர்கள் ஆளுமைத் திறனை வெளிப்படுத்துவதில்லை என்பதும் பரவலான கருத்து. பல்வேறு ஊக்கத் திட்டங்கள் மாணவர்களைப் பள்ளிக்கு வரத் தூண்டினாலும், கல்வி முறையில் மனப்பாட முறையும், மதிப்பெண்களை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுவதும் மாறினால் மட்டுமே நாம் எதிர்பார்க்கும் மாற்றங்கள் சாத்தியமாகும்.

– **ராதிகா சிவசங்கர்**, ஆசிரியர்




நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்த 'வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நாடு தழுவிய அளவில் "எனது மண் எனது தேசம்" என்ற இயக்கம் ஆகஸ்ட் 9 முதல் 30 வரை, "எனது மண் எனது தேசம்" இயக்கத்தில் கிராமம், மற்றும் வட்டார அளவிலும் உள்ளாட்சி அமைப்புகள் நிலையிலும் மாநில மற்றும் தேசிய அளவிலும் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இந்த இயக்கத்தில் துணிச்சலான இதயங்களை (வீர்ஸ்) நினைவுகூரும் வகையில் நாடு முழுவதும் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளும் அடங்கும். அவர்களை நினைவுகூரும் வகையில் கல்வெட்டுகள் கிராம ஊராட்சிகளில் நிறுவப்படும். இந்த இயக்கம் 2021 மார்ச் 12 அன்று தொடங்கிய 'சுதந்திரத்தின் அமிர்தப் பெருவிழா' வின் நிறைவு நிகழ்வாகும். இந்தியா முழுவதும் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மக்கள் பங்கேற்பை கொண்டுள்ளது.

பிரதமர் திரு.நரேந்திர மோடி அண்மையில் மனதின் குரல் ஒலிபரப்பின் போது இந்த இயக்கத்தை அறிவித்தார். இந்த இயக்கம் நாட்டுக்காக தங்கள் இன்னுயிரை தியாகம் செய்த துணிச்சலான சுதந்திர போராட்ட வீரர்கள் மற்றும் துணிச்சலான இதயங்களை கௌரவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கிராமம், ஊராட்சி, ஒன்றியம், நகரம், நகராட்சி போன்ற பகுதிகளைச் சேர்ந்த உள்ளூர் வீரர்களின் தியாக உணர்வை போற்றும் வகையில் நினைவுத் தூண்கள் அமைக்கப்பட உள்ளன. அதில் அந்த பிராந்தியத்தைச் சேர்ந்த நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்தவர்களின் பெயர்களுடன் பிரதமரின் செய்தி இடம்பெறும்.

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் 7500 கலசங்களில் மண் கொண்டுவந்து தில்லியில் 'அமிர்த தோட்டம்' உருவாக்க 'அமிர்த கலச யாத்திரை' நடத்தப்படும். இந்த 'அமிர்த தோட்டம்' ஒரே பாரதம், உன்னத பாரதம் என்பதற்கான உறுதிப்பாட்டைக் குறிக்கும்.

கடந்த ஆண்டு, "வீடுதோறும் மூவண்ணக்கொடி" நிகழ்ச்சி, அனைவரின் பங்கேற்பால் பெரும் வெற்றி பெற்றது. இந்த ஆண்டும், 2023 ஆகஸ்ட் 13 முதல் 15 வரை இது கொண்டாடப்பட உள்ளது. எல்லா இடங்களிலும் இந்தியர்கள் தேசியக் கொடியை ஏற்றலாம், கொடியுடன் செல்ஃபி எடுக்கலாம், வலைத்தளத்தில் பதிவேற்றலாம்.

எனது மண் எனது தேசம் என்பதற்கான இணையதளம் https://merimaatimeradesh.gov.in போர்டல் https:// yuva.gov.in

வீடுகள்தோறும் மூவண்ணக்கொடி வலைத்தளம் https://harghartiranga.com

# நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல பெண்கள் தலைமையிலான வளர்ச்சி அவசியம்: சுதந்திர தின உரையில் பிரதமர்

77-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு செங்கோட்டையில் இருந்து உரையாற்றிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, உலகின் 5வது பெரிய பொருளாதாரமாக இந்தியா உயர்ந்ததற்கு 140 கோடி இந்திய மக்களின் முயற்சிகளே காரணம் என்றார். கசிவுகளைத் தடுத்து, வலுவான பொருளாதாரத்தை உருவாக்கி, ஏழைகளின் நலனுக்காக அதிக பணத்தை இந்த அரசு செலவழித்ததால் இது நிகழ்ந்துள்ளது என்று அவர் கூறினார்.

பிரதமர் திரு. மோடி, "இன்று நான் மக்களுக்குச் சொல்ல விரும்புவது என்னவென்றால், நாடு பொருளாதார ரீதியாக வளமாக இருக்கும்போது, அது கஜானாவை நிரப்பாது; இது தேசத்தின் மற்றும் அதன் மக்களின் திறனை அதிகரிக்கிறது. அரசாங்கம் தனது குடிமக்களின் நலனுக்காக ஒவ்வொரு பைசாவையும் செலவிடுவதாக உறுதியளித்தால் முடிவுகள் தானாகவே வரும். 10 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய அரசு மாநிலங்களுக்கு ரூ.30 லட்சம் கோடி அனுப்பியது. கடந்த 9 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை ரூ.100 லட்சம் கோடியை எட்டியுள்ளது. இந்த எண்களைப் பார்க்கும்போது, இவ்வளவு பெரிய மாற்றம் திறன் அதிகரித்திருப்பதை நீங்கள் உணர்வீர்கள்!"என்று கூறினார்.

சுயவேலைவாய்ப்பைப் பொறுத்தவரை, "இளைஞர்கள் தங்கள் தொழிலுக்கான சுயவேலைவாய்ப்பிற்காக ரூ.20 லட்சம் கோடிக்கு மேல் வழங்கப்பட்டுள்ளது. 8 கோடி பேர் புதிய தொழில் தொடங்கியுள்ளனர், அது மட்டுமல்ல, ஒவ்வொரு தொழிலதிபரும் ஒன்று அல்லது இரண்டு பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளனர். எனவே, முத்ரா திட்டம் மூலம் பயனடையும் 8 கோடி குடிமக்கள் 8-10 கோடி புதிய மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் திறனைக் கொண்டுள்ளனர்.

பெண்கள் தலைமையிலான வளர்ச்சியின் முக்கியத்துவத்தையும், நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வது எவ்வாறு அவசியம் என்பதையும் விளக்கினார். சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அதிக எண்ணிக்கையிலான பெண் விமானிகளைக் கொண்டுள்ளது என்று இந்தியா இன்று பெருமையுடன் கூற முடியும் என்று பிரதமர் நினைவு கூர்ந்தார். சந்திரயான் திட்டத்தை பெண் விஞ்ஞானிகளும் வழிநடத்துகிறார்கள் என்று பிரதமர் மேலும் கூறினார்.

ஜி 20 இல் பெண்கள் தலைமையிலான வளர்ச்சி பிரச்சினையை முன்னெடுத்துள்ளதாகவும், ஜி 20 நாடுகள் அதை ஏற்றுக்கொண்டு அதன் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதாகவும் பிரதமர் கூறினார்.



'நாரி சம்மான்' பற்றிப் பேசிய பிரதமர், தமது வெளிநாட்டுப் பயணம் ஒன்றின் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார், அங்கு அந்த நாட்டின் மூத்த அமைச்சர் ஒருவர் இந்தியாவில் உள்ள பெண்கள் அறிவியல் மற்றும் பொறியியல் படிக்கிறார்களா என்று கேட்டார். இன்று நமது நாட்டில் ஸ்டெம் (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம்) படிப்பில் சிறுவர்களை விட மாணவிகள் அதிகமாக உள்ளனர் என்றும், இன்று உலகம் நமது இந்த திறனை உற்று நோக்குகிறது என்றும் பிரதமர் கூறினார்.

மேலும், "வருமான வரியின் (விலக்கு) வரம்பு ரூ .2 லட்சத்திலிருந்து ரூ .7 லட்சமாக உயர்த்தப் பட்டதால், சம்பள வர்க்கத்திற்கு, குறிப்பாக நடுத்தர வர்க்கத்திற்கு மிகப்பெரிய நன்மை, " என்று பிரதமர் கூறினார்.

உலகம் ஒட்டுமொத்தமாக எதிர்கொள்ளும் சமீபத்திய பிரச்சினைகள் குறித்து குறிப்பிட்ட பிரதமர், "கோவிட் -19 தொற்றுநோயிலிருந்து உலகம் இன்னும் மீளவில்லை, மேலும் போர் ஒரு புதிய சிக்கலை உருவாக்கியது. இன்று, உலகம் பணவீக்க நெருக்கடியை எதிர்கொள்கிறது என்றார்.

பணவீக்கத்தை எதிர்த்துப் போராடுவது குறித்து பேசிய பிரதமர், "பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த இந்தியா தன்னால் முடிந்தவரை முயற்சித்துள்ளது. நமது விஷயங்கள் உலகை விட சிறந்தவை என்று நாம் நினைக்க முடியாது, எனது நாட்டு மக்கள் மீதான பணவீக்கத்தின் சுமையைக் குறைக்க நான் இந்தத் திசையில் அதிக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பணவீக்கத்தை கட்டுப்படுத்த எனது முயற்சிகள் தொடரும்" என்றார்.




# உயர்கல்வி பயில தைவானுக்கு செல்லும் அரசுப் பள்ளி மாணவிகள்;

## முதலமைச்சர் ஸ்டாலின் பாராட்டு!

வரலாற்றில் முதன்முறையாக முழுமையாக ஒரு பன்னாட்டுக் கல்வி உதவித்தொகைக் கிடைத்து வெளிநாட்டுக்குப் படிக்கச் செல்கிறார் ஒரு அரசுப் பள்ளி மாணவி.

இந்தப் பன்னாட்டு ஊக்கத்தொகைக்கு இந்தியாவிலிருந்து 3 பேர் மட்டுமே தேர்வாகி உள்ளனர். அதில், முதல் இரண்டு இடங்களைத் தமிழ்நாடு அரசுப் பள்ளி மாணவர்கள் எட்டிப் பிடித்துள்ளனர்.

11 ஆம் வகுப்புவரை அரசுப் பள்ளியில் படித்த இந்த மாணவி, நன்றாகப் படித்து அதிக மதிப்பெண்களை எடுத்ததால், 12 ஆம் வகுப்பை தருமபுரி அரசு மாடல் ஸ்கூலில் சேர்ந்து படிக்கத் தேர்வு செய்யப்பட்டார். அதன் மூலம் அங்கே உண்டு உறைவிடப் பள்ளியில் தங்கி, முழுமையான ஈடுபாட்டுடன் படித்து இன்று இந்தளவுக்கு முன்னேறியுள்ளார்.

யார் இந்த மாணவி? அவர் பெயர் என்ன? சாதாரண கூலித் தொழிலாளியின் மகள்தான் இவர். இவர் பெயர் ஜெயஸ்ரீ.

“எனக்கு அரசு மாடல் ஸ்கூலில் படிக்க வாய்ப்பு கிடைத்ததால்தான் நான் இந்தளவுக்கு முன்னேறமுடிந்தது. அங்கே உள்ள ஆசியர்கள் முழு அக்கறையுடன் சொல்லிக் கொடுத்தார்கள். அங்கே பள்ளிக் கல்வியை முடித்த பிறகு ‘நான் முதல்வன்’ திட்டத்திற்குத் தேர்வானேன்.

அதன் பிறகு சென்னையில் வந்து தங்கிப் படித்தேன். அதன்மூலம்

வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்தார்கள். எனக்கு அதற்கான வாய்ப்பு கிடைத்தது. இப்போது தமிழ்நாடு அரசு உதவியுடன் படிக்கச் செல்கிறேன்'' என்கிறார் ஜெயஸ்ரீ.

அவரிடம் குடும்பப் பின்புலம், மற்றும் கடந்த கால அனுபவங்கள் பற்றிக் கேட்டோம். தொடர்ந்து பேசிய ஜெயஸ்ரீ, ''என் அப்பா பெயர், பெருமாள். அம்மா பெயர், அமலா. இரண்டு பேரும் கூலித்தொழிலாளிகளாக உள்ளனர். நான் கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி ஆகிய இரு மாவட்டங்களிலுள்ள அரசுப் பள்ளிகளில் படித்தேன். 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 96% மதிப்பெண்களுடன் தேர்வில் வெற்றி பெற்றேன்.

தற்போது தமிழ்நாடு அரசு கொண்டுவந்துள்ள 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் சிறப்புப் பயிற்சி பெற்றேன். அதன் மூலம் தைவான் நாட்டின் Ministry of Education மூலம் ஊக்கத்தொகையுடன் Kun Shan University இளங்கலை இயந்திரப் பொறியியல் படிக்கப் போகிறேன்.

பண்ணந்தூர் என்ற குக்கிராமத்தில் பிறந்துவளர்ந்த எனக்கு, எங்கள் பகுதியில் இருக்கும் தருமபுரி நகரத்திற்குச் செல்வதே பெரும் கனவாக இருந்தது. அந்தக் காலங்களைக் கடந்து சிங்கார சென்னைக்கு வந்து பயிற்சி பெறவும், அப்பயிற்சியைப் பெற்று இன்று கடல்கடந்து வேறு நாட்டிற்குச் செல்வதற்கு வாய்ப்பை வழங்கிய இருப்பது கல்வி எனும் ஆயுதம்தான்.

எங்கள் வீட்டில் முதல் தலைமுறை பட்டதாரி நான் தான். என்னால் இதைச் சாதிக்க முடியுமானால், நிச்சயம் உங்களாலும் முடியும். உங்களிடம் இருந்து எதை வேண்டுமானாலும் பறிக்கலாம், நீங்கள் பெற்ற கல்வியைத்தவிர.

'புதுமைப் பெண்' திட்டம், 'நான் முதல்வன்', 'இல்லம் தேடிக் கல்வி', 'சிற்பி' , 'வானவில் மன்றம்' போன்ற பல புதுமையான திட்டங்கள் மூலம் என்னைப் போன்ற பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் வாழ்க்கையை வளவாக்கி வரும் முதல்வர் ஸ்டாலினுக்கு மிகப் பெரிய நன்றி'' என்கிறார்

''உயர்கல்வி நிறுவனங்களில் அரசுப் பள்ளி மாணவர்கள் நுழையும்போதுதான் சமூகநீதி முழுமை அடையும். ஏற்றத் தாழ்வு அற்ற சமுதாயம் உருவாகவேண்டும் என்றால் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கின்ற மாதிரியான நிலை இருக்கவேண்டும். அந்த நோக்கத்துடன் இந்தத் திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது. இந்த உயர்கல்வி வாய்ப்பு மூலமாக அது உங்களுக்கு சாத்தியப்பட்டுள்ளது.

நான் ஐஐடி, என்ஐடி போன்ற உயர்கல்வி நிறுவனங்களின் பேராசிரியர்களிடம் கேட்டுக் கொள்வது எல்லாம் ஒன்றே ஒன்றுதான். எங்கள் பிள்ளைகள் உங்கள் நிறுவனங்களுக்கு வருகிறார்கள். அவர்களை அரவணைத்துக் கொள்ளுங்கள்'' என்று மிக நெகிழ்ச்சியாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சுட்டிக்காட்டினார்.

உயர்கல்வி நிறுவனங்களில் படிக்கத் தேர்வாகி உள்ள அனைத்து மாணவர்களுக்கும் பாராட்டு சான்றிதழ் மற்றும் மடிக்கணினிகளை முதலமைச்சர் ஸ்டாலின் வழங்கியுள்ளார்.




# போலி செய்தியை பரப்பினால் ஜெயில்!

## புதிய கிரிமினல் சட்டத்தில் மத்திய அரசு அதிரடி!

மத்திய அமைச்சர் அமித் ஷா லோக்சபாவில் அறிமுகப்படுத்திய சட்ட மசோதாவின்படி, போலி செய்திகளை பரப்பினால் கடுமையான தண்டனை விதிக்கப்பட இருக்கிறது. போலி செய்திகள் இப்போது நமக்கு மிகப் பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது. உண்மையைக் காட்டிலும் பொய் 100 மடங்கு வேகமாகப் பரவுவதால் அதைச் சமாளிப்பதே மிகப் பெரிய பிரச்சினையாக மாறியிருக்கிறது.

மணிப்பூர் கலவரம் கூட போலி செய்திகளின் காரணமாகவே இந்தளவுக்கு மிக மோசமாக மாறியது. போலி செய்திகள் பரவுவதைத் தடுக்க மத்திய அரசு இப்போது கடுமையான நடவடிக்கைகளை எடுக்கிறது.

**மசோதா:** கடந்த மாதம் நடைபெற்ற நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நேற்றுடன் நிறைவடைந்தது. பல புதிய மசோதாக்கள் கொண்டு வரப்பட்டன. குறிப்பாக 160 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவில் நடைமுறையில் உள்ள சட்டங்களில் மாற்றம் கொண்டு வரப்பட்டன.

குறிப்பாக இந்தியத் தண்டனை சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம், இந்தியச் சாட்சிய சட்டம் ஆகியவற்றையும் மாற்றும் புது சட்டம் கொண்டு வரப்பட்டது. பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா மசோதா, பாரதிய சக்ஷவா மசோதா ஆகியவை தாக்கல் செய்யப்பட்டது.

**3 ஆண்டுகள் சிறை:** அதேபோல பாரதிய நியாய சன்ஹிதா மசோதாவையும் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தாக்கல் செய்தார். இந்த மசோதா இப்போது நாடாளுமன்ற நிலைக்குழுவுக்கு அனுப்பப்பட்டது. இந்த முன்மொழியப்பட்ட புது சட்டத்தின் கீழ் இந்தியாவின் இறையாண்மை மற்றும் பாதுகாப்பிற்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் போலி செய்திகள் அல்லது தவறான தகவல்களைப் பரப்புவோருக்குச் சட்டப்பிரிவு 195இன் கீழ் 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

இந்த சட்டப்பிரிவு பிரிவு 195 (1) பீஇன் படி, “இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு அல்லது பாதுகாப்பிற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் தவறான அல்லது பொய்யான தகவல்களை வெளியிடுவது அல்லது பரப்பினால் மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை, அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்“ எனக் கூறப்பட்டுள்ளது.

**கடும் நடவடிக்கை:** ‘பொது அமைதிக்கு எதிரான குற்றங்கள்’ என்ற பிரிவின் கீழ் இந்த மசோதாவில் அத்தியாயம் 11-ன் கீழ் இந்த முன்மொழியப்பட்ட சட்டம் இருக்கிறது. இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 153பி பிரிவின் கீழ் தேசிய ஒருமைப்பாட்டுக்கு எதிராகச் செயல்படுவோர் மீது எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து விளக்கப்பட்டுள்ளது.

இந்த மசோதாவைக் கொண்டு வரும் போது பேசிய அமைச்சர் அமித் ஷா, “இந்தியா மக்களுக்கு நீதி வழங்குவது. அரசியலமைப்புச் சட்டம் வழங்கிய உரிமைகளைப் பாதுகாப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட இந்த மூன்று மசோதாக்களைக் கொண்டு வந்துள்ளோம். அடிமைத்தனத்தின் அனைத்து அறிகுறிகளையும் நீக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி தனது சுதந்திர தின உரையில் கூறியிருந்தார். அதை நிறைவேற்றவே இதைச் செய்கிறோம்.

இந்தியத் தண்டனைச் சட்டம், 1860க்கு பதிலாகப் பாரதிய நியாய சன்ஹிதா மசோதா 2023; குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1898க்குப் பதிலாகப் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா மசோதா மற்றும் இந்தியச் சாட்சியச் சட்டம், 1872க்கு பதிலாகப் பாரதிய சாக்ஷ்யா மசோதா கொண்டு வரப்படும்“ என்று அமைச்சர் அமித் ஷா கூறியிருந்தார். இந்தியத் தண்டனைச் சட்டம், 1860, குற்றவியல் நடைமுறைச் சட்டம், மற்றும் இந்தியச் சாட்சிய சட்டம் ஆகிய மூன்றுக்குப் பதிலாக இந்த புதிய மசோதாக்கள் கொண்டு வரப்பட்டுள்ளது.

# கூடுதல் காவல் ஆணையராக பதவியேற்பு அஸ்ரா கார்க்!

தமிழ்நாட்டில் 27 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அதில் தென்மண்டல ஐஜி பொறுப்பை வகித்து வந்த அஸ்ரா கார், சென்னை கூடுதல் காவல் ஆணையராக (வடக்கு) நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவை பூர்வீகமாக கொண்ட அஸ்ரா கார்க் அடிப்படையில் ஒரு எலக்ட்ரிக்கல் எஞ்சினியர். 2004ஆம் ஆண்டில் தமிழ்நாடு கேடர் ஐபிஎஸ் ஆனார்.

அன்றைய ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் உதவி காவல் ஆணையராக தனது காவல்துறை வாழ்கையை தொடங்கிய அஸ்ரா கார்க்

2008ஆம் ஆண்டு முதல் 2010 ஆண்டு வரை சர்ச்சைகள் நிறைந்த திருநெல்வேலி மாவட்டத்தின் ஊரக பகுதிகளின் எஸ்.பியாக பணியாற்றிய போது அங்கு கோலோச்சிய கந்துவட்டி கலாச்சாரத்தை ஒழிக்க கடும் நடவடிக்கைகளை எடுத்தார். கந்துவட்டி காரர்களையும் அதிக வட்டிக்கு பணம் கொடுத்து கடனை வசூலிக்க ரவுடிகளை வைத்து மிரட்டுபவர்களையும் பிடிக்க சிறப்பு காவல் படையை உருவாக்கினார்.

2010ஆம் ஆண்டில் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பொறுப்பேற்ற கார்க் உத்தமபுரத்தில் தலித் மக்கள் நுழைவதற்கு எதிராக கட்டப்பட்ட தீண்டாமை சுவரை அகற்றுவதில் முக்கிய நடவடிக்கை எடுத்தார்.

2013ஆம் ஆண்டில் தேனி மாவட்டம் தேவதானப்பட்டியில் இளம் பெண்ணுடன் எய்ட்ஸ் பாதித்த ஆணுக்கு நடைபெற இருந்த திருமணத்தை தடுத்ததற்காக பாராட்டுகளை பெற்றார்.

பெண் சிசுக்கொலைகள் அதிகம் உள்ள மாவட்டங்களாக அறியப்பட்ட தருமபுரியில் பெண் சிசுக்கொலையில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் அம்மாவட்டத்தில் நடந்த சிறுநீரக விற்பனை




மோசடியை தடுக்க கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

கடந்த 2016ஆம் ஆண்டு மத்திய புலனாய்வு அமைப்பான சிபிஐக்கு பதவி உயர்வுடன் கூடிய பணியிட மாற்றம் பெற்ற அஸ்ரா கார்க் கடந்த 2002ஆம் ஆண்டு ஐஜியாக பதவி உயர்வு பெற்று மீண்டும் தமிழக பணிக்கு வந்தார்.

அவரை தென்மண்ட ஐஜியாக நியமனம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்தது. ஆந்திராவில் கஞ்சாவை பயிரிட்டு மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் விற்பனை செய்யும் கஞ்சா வியாபாரிகளை பிடித்தது மட்டுமின்றி அவர்களின் சொத்துகள், வங்கி கணக்குகளை முடக்கி அவர்களின் கொட்டத்தை அடக்கியதில் அஸ்ரா கார்க்கிற்கு முக்கிய பங்குண்டு.

தென் மாவட்டங்களில் நடைபெறும் சாதி சண்டைகளை கட்டுப்படுத்த குற்றப்பின்னணி இருக்கும் நபர்கள் சாதி அமைப்புகளில் தொடர்பில் இருந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்ததுடன் பழிக்கு பழி, சாதிய மோதல்கள், கோஷ்டி அடிதடி உள்ளிட்டவற்றை முன்கூட்டியே அறிந்து அதனை தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார்.

இந்த நிலையில்தான் கூடுதல் கமிஷனராக சென்னைக்கு பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் அஸ்ரா கார்க்.



# இந்தியாவின் 'ஆன்மீக தலைநகர்' தமிழகம்

# ஆளுநர் ஆர்.என்.ரவி பெருமிதம்

இந்தியாவின் ஆன்மிகத் தலைநகராக தமிழகம் திகழ்கிறது என திருவண்ணாமலையில் நடைபெற்ற சாதுக்களுடனான சந்திப்பு நிகழ்ச்சியில் பேசிய தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி கூறியுள்ளார்.

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி 2 நாள் பயணமாக திருவண்ணாமலைக்கு இன்று (ஆகஸ்ட் 10ம் தேதி) வருகை தந்தார். திருவண்ணாமலை கிரிவல பாதையில் உள்ள திருமண மகாலில், சாதுக்களுடனான சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசும்போது, "திருவண்ணாமலை ஆன்மிக பூமியாகும். இது சிவபெருமானின் பூமி. நினைத்தாலே முக்கி தரும் பூமியாகும். சிவனின் விருப்பமின்றி எதுவும் நடந்துவிடாது. சாதுக்கள், சன்னியாசிகள் மற்றும் ரிஷிகளால் பாரத நாடு உருவாக்கப்பட்டது. இந்த புண்ணிய பூமியில் கால் வைக்க பெருமைப்படுகிறேன். பிற நாடுகளை போல் நம் பாரத நாடு இல்லை. ஆதிக்க சக்திகள் மூலம் பிற நாடுகள் உருவானது. நமது பாரத நாடு என்பது சாதுக்கள், சன்னியாசிகள், ரிஷிகளின் வலிமையால் உருவாக்கப்பட்டது.

பல அரசாட்சிகள் மூலம் பிளவு பட்டிருந்தாலும், நாம் அனைவரும் ஒன்று. நமது நாடு பாரம்பரிய இலக்கியத்துடன் தொடர்பு கொண்டது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, நமது ரிஷி குலத்தோர் ஞானம் பெற்று, இந்த உலகம் சிவனால் உருவாக்கப்பட்டது, நாம் அனைவரும் சிவனின் குழந்தைகள் என்பதால் ஒன்றாக இருக்க வேண்டும் என உணர்த்தியவர்கள். இப்பிரபஞ்சம், சிவனின் பிரதிபலிப்பாகும். இந்த உண்மையே சனாதன தர்மத்தின் மையாகும். தெற்கே கன்னியாகுமரி முதல் வடக்கே இமாலயா வரை, நாம் அனைவரும் பாரதக் குழந்தைகள்.

சனாதனம் என்பது தனி ஒருவருக்கானதல்ல. பாரதத்தின் குடும்பத்துக்கானது. அனைவரும் நலமுடன் வாழ வேண்டும் என்ற பரந்த உயர்ந்த கருத்துடையதுதான் சனாதன தர்மமாகும். நான், எனது என்ற குறுகி இல்லாமல் நாம், நமது என்ற பரந்த மனப்பான்மை கொண்டது. குறுகிய மனப்பான்மை கொள்கைகளால், சனாதனம் தர்மம் சில அழிவுகளை சந்திக்க நேர்ந்தது. நமது நாடு 1947ல் உருவாக்கப்பட்டதல்ல. 1947 ல் விடுதலை மட்டுமே அடைந்தோம்.




பாரதத்தின் ஆன்மிகத் தலைநகராக தமிழகம் உள்ளது என்பதை தமிழகம் முழுவதும் சுற்றி வந்தபோது புரிந்தது.

அகத்தியர், திருமூலர், பதஞ்சலி, நாயன்மார்கள், ஆழ்வார்கள் அவதரித்து 'நான் யார்' என்பதை உணர்ந்து, ஒற்றுமையுடன் இணைந்து வாழ்வதற்கான வழிகளை தெரிவித்துள்ளனர். வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என வள்ளலார் தெரிவித்துள்ளார். நான் வேறு, பயிர் வேறு அல்ல, பயிர் வாடிய போது வருந்துகிறேன் என்றார். இது தான் சனாதன தர்மம். நமது நாட்டின் ஆணி வேர் ஆன்மிகத்தை தவிர்த்து அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வழிபாதைகளை அமைத்தது. ஆன்மிக வளர்ச்சி இல்லாமல் பாரதம் வலிமை பெறாது. உலகலாவிய வளர்ச்சிகளை பின் பற்றினால், நமது நாடு பாரத நாடாக இருக்காது.

மேற்கத்திய நாடுகளின் போலி மாதிரியாகவே இருக்கும். ஆன்மிக எழுச்சி என்பது, நமது நாட்டின் முன்னேற்றத்துக்கு மட்டுமின்றி, உலகத்துக்கும் பயன் அளிக்கக் கூடியதாகும். அனைவரும் ஒன்றிணைந்து இனிமையாக வாழ்வை வாழ்வதே பாரதத்தின் குறிக்கோளாகும். இறை சக்தி, இறை ஒளி உலகம் முழுவதும் பரவ வேண்டும். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது அடிப்படை தத்துவம். இதுமட்டுமே உலகத்தை காப்பாற்றும். ஆலயம், ஆசிரமம் என்று இல்லாமல், மக்கள் அனைவரையும் ஆன்மிக ஆற்றல் உள்ளவர்களாக உருவாக்கி, ஆன்மிகத்தை சமுதாயம் முழுவதும் விரிவடைய செய்வது உங்களது கடமையாகும்.

சிவ பெருமானின் பாதையான கிரிவல பாதையில் அசைவ உணவகத்தை அனுமதிக்கக் கூடாது. சகோதரி நிவேதிதாவின் சமூக பணி மற்றும் தொண்டுகளை இந்திய அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். இதனை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார். இந்நிகழ்வில் சாதுக்கள், சிவனடியார்கள் மற்றும் ஆன்மிக வாதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். பின்னர் சாதுகளுக்கு அன்னதானம் வழங்கினார்.

# தேசியக் கல்விக் கொள்கை திறன் மேம்பாட்டிற்கு வழி வகுக்கிறது:
# மூன்று ஆண்டு மைல்கற்கள்

தேசிய கல்விக் கொள்கை 2020 (என்இபி)-இன் மூன்றாண்டு நிறைவையொட்டி, திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோருக்கான மண்டல இயக்குநரகம் (ஆர்டிஎஸ்டிஇ) அக்கொள்கையின் திறன் மேம்பாட்டு முயற்சிகளை செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிறப்பான முன்னேற்றங்களை எடுத்துரைப்பதில் பெருமிதம் கொள்கிறது. முழுமையான வளர்ச்சியை மேம்படுத்தவும், உள்ளடக்கிய மற்றும் நிலையான திறன்களை ஊக்குவிக்கவும், எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் திறன்களுடன் மாணவர்களைத் தயார்படுத்தவும் ஆர்டிஎஸ்டிஇ-இன் அர்ப்பணிப்பு அசைக்க முடியாததாக உள்ளது. புதுமையான திட்டங்கள், தொழில்துறை-கல்வித்துறை ஒத்துழைப்பு மற்றும் விரிவான ஆசிரியர் பயிற்சி ஆகியவற்றின் மூலம், நாளைய பணியாளர்களை வடிவமைப்பதில் ஆர்டிஎஸ்டிஇ முக்கியப் பங்கு வகிக்கிறது.

**1. பொதுக் கல்வியில் தொழிற்கல்வியை ஒருங்கிணைத்தல்**

என்இபி 2020, தொழிற்கல்வியை பொதுக் கல்வியுடன் ஒருங்கிணைப்பதன் முக்கியத்துவத்தை கல்வி மற்றும் நடைமுறை திறன்களுடன் மாணவர்களைத் தயார்படுத்துகிறது. பிரதமரின் திறன்மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ஐஐடிகள், ஐஐஐடிகள், என்ஐடிகள் மற்றும் மத்திய பல்கலைக்கழகங்கள் போன்ற மதிப்புமிக்க நிறுவனங்கள் உள்பட 1000 திறன் மையங்களுடன் ஆர்டிஎஸ்டிஇ இணைந்துள்ளது. இந்தத் திறன் மையங்களில் தற்போது சுமார் 1 லட்சம் விண்ணப்பதாரர்கள் சேர்ந்துள்ளனர், பல்வேறு துறைகளில் தரமான பயிற்சி மூலம் பயனடைகின்றனர்.

**2. முழுமையான மற்றும் வேலைவாய்ப்பு திறன்களில் கவனம் செலுத்துதல்**

ஆர்டிஎஸ்டிஇ-இன் வேலைவாய்ப்புத் திறன்கள் பாடத்திட்டம், பயிற்சியாளர்கள்




தொழில்துறைக்கு தயாராக இருப்பதை உறுதிசெய்ய மறுசீரமைக்கப்பட்டுள்ளது. 1 ஆண்டு, 2 ஆண்டுகள் மற்றும் 6 மாத கால வர்த்தகத்திற்கு இப்போது 120 மணிநேரம், 180 மணிநேரம் மற்றும் 60 மணிநேரம் என விரிவுபடுத்தப்பட்டுள்ள படிப்புகள் மூலம், மாணவர்கள் போட்டித்தன்மை வாய்ந்த வேலை வாய்ப்புச் சந்தைக்கு சிறப்பாகத் தயாராகி உள்ளனர்.

**3. மாநில மொழிகளில் திறமை**

மொழியியல் பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கிய கல்விக்கான அதன் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, 12 மாநில மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட பாரதிய பாஷாவில் 100 புத்தகங்களை ஆர்டிஎஸ்டிஇ வெளியிட்டுள்ளது. இம்முயற்சியானது மொழித் தடைகளை உடைத்து, திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அறிவை அனைவருக்கும் அணுகக்கூடியதாக மாற்றுகிறது.

**4. தொழில்நுட்பம் சார்ந்த கற்றல்**

உலகளாவிய சந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, 330 புதுமையான வயது படிப்புகளை ஆர்டிஎஸ்டிஇ உருவாக்கியுள்ளது, இது தொழில்துறை 4.0 தேவைகளுக்கு ஏற்ப

வடிவமைக்கப்பட்டுள்ளது. கற்றவர்கள் சமீபத்திய தொழில்நுட்பத் திறன்களைக் கொண்டுள்ளனர், டிஜிட்டல் பொருளாதாரத்தில் செழிக்க அவர்களை மேம்படுத்துகிறார்கள்.

**5. தொழில்-கல்வித்துறை ஒத்துழைப்பு**

என்இபி 2020 கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்களுக்கு இடையே வலுவான ஒத்துழைப்பை வலியுறுத்துகிறது. தொழில்துறை தேவைகளுடன் பாடத்திட்டத்தை சீரமைக்கவும், பயிற்சிகளை வழங்கவும், தொழில்துறை வெளிப்பாட்டை ஊக்குவிக்கவும் ஆர்டிஎஸ்டிஇ கூட்டாண்மைகளை எளிதாக்குகிறது.

**6. மறுதிறன் - மேம்பாடு**

வேகமாக மாறிவரும் சூழலுடன், ஆர்டிஎஸ்டிஇ மறுதிறன் மற்றும் மேம்பாட்டின் முக்கியத்துவத்தை ஒப்புக்கொள்கிறது. கல்வித்துறை, தொழில்துறை மற்றும் அரசு ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டு முயற்சிகள், புதுமை மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை உந்தித் தள்ளும் எதிர்காலத்துக்கு தயாரான பணியாளர்களை இது உறுதி செய்கிறது.

**7. உள்ளடக்கிய மற்றும் நிலையான திறன்கள்**

ஆர்டிஎஸ்டிஇ திறன் மேம்பாட்டை உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான வழிமுறையாக கருதுகிறது. பெண்கள், சிறைக் கைதிகள், திருநங்கைகள் மற்றும் கைவினைஞர்களுக்கான திறன் பயிற்சி போன்ற முயற்சிகள் பலதரப்பட்ட மற்றும் அதிகாரம் பெற்ற பணியாளர்களுக்கு பங்களிக்கின்றன.

**8. தொழில்முனைவுக் கல்வி**

ஆர்.டி.எஸ்.டி.இ. தொழில்முனைவோரை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு நிகழ்ச்சி நிரலை, தேடுபவர்களை விட வேலை அதிகம் வழங்குநர்களை உருவாக்குகிறது. மாணவர்களிடையே தொழில் முனைவோர் மனப்பான்மையை ஊக்குவிக்கும் வகையில், தொழில் முனைவோர் படிப்புகளுக்கான, தொழில்முனைவு மற்றும் சிறு தொழில் மேம்பாட்டுக்கான தேசிய நிறுவன மையங்களாக, தேசிய திறன் பயிற்சி நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**9. தொடர்ச்சியான ஆசிரியர் பயிற்சி மற்றும் தொழில்முறை மேம்பாடு**

ஆசிரியர்களின் முக்கியப் பங்கை அங்கீகரித்து, மாணவர்களின் வளர்ச்சியை திறம்பட வழிநடத்தத் தேவையான திறன்களுடன் கல்வியாளர்களை உருவாக்க விரிவான பயிற்சி திட்டங்களை ஆர்.டி.எஸ்.டி.இ. வழங்குகிறது.

திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவுக்கான மண்டல இயக்குநரகம், திறமையான மற்றும் தொழில் முனைவோர் கொண்ட இந்தியாவை உருவாக்கும் கண்ணோட்டத்தில் உறுதியாக உள்ளது. மாறிவரும் உலகில் இளைஞர்கள் வெற்றிபெறத் தேவையான கருவிகளைக் கொண்டு அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதில் அமைச்சகத்தின் அர்ப்பணிப்பை இதுவரை செய்துள்ள சாதனைகள் விளக்கிக் காட்டுகின்றன. புதுமையான முன்முயற்சிகள், உத்திப்பூர்வ கூட்டாண்மை மற்றும் உள்ளடக்கிய கொள்கைகள் மூலம், ஆர்.டி.எஸ்.டி.இ. இந்தியாவின் தொழிலாளர்களின் எதிர்காலத்தை வடிவமைத்து, பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

**ஆர்.டி.எஸ்.டி.இ. பற்றி**

திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவுக்கான மண்டல இயக்குநரகம் (ஆர்.டி.எஸ்.டி.இ), இந்தியாவில் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. தேசிய கல்விக் கொள்கை 2020 இன் திறன் மேம்பாட்டு முயற்சிகளை செயல்படுத்தும் முக்கிய அமைப்பாகும். இது ஒரு திறமையான மற்றும் ஆர்வமுள்ள பணியாளர்களை உருவாக்கவும், பொருளாதார வளர்ச்சி மற்றும் உள்ளடக்கிய மேம்பாட்டை வளர்க்கவும் பாடுபடுகிறது.




# சென்னை பல்கலைக்கழகத்தின் 165-வது பட்டமளிப்பு விழாவில் குடியரசுத் தலைவர் பங்கேற்பு

சென்னையில் ஆகஸ்ட் 6, 2023 அன்று நடைபெற்ற சென்னைப் பல்கலைக்கழகத்தின்165-வது பட்டமளிப்பு விழாவில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கலந்து கொண்டு உரையாற்றினார்.

விழாவில் பேசிய குடியரசுத் தலைவர், 1857-ம் ஆண்டு தொடங்கப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகம் இந்தியாவின் பழமையான நவீன பல்கலைக்கழகங்களில் ஒன்று என்ற பெருமையைப் பெற்றுள்ளது என்றார். இப்பல்கலைக்கழகம் அறிவைப் பரப்புவதில் முக்கியப் பங்காற்றியுள்ளது. 165 ஆண்டுகளுக்கும் மேலான தனது பயணத்தில், சென்னைப் பல்கலைக்கழகம் உயர்தர கல்வியாளர்களைக் கண்டு பிடித்து, அறிவார்ந்த ஆர்வத்தையும் விமர்சன சிந்தனையையும் வளர்க்கும் சூழலை வழங்கியுள்ளது. எண்ணற்ற அறிஞர்களையும், தலைவர்களையும், தொலைநோக்குப் பார்வை கொண்டவர்களையும் உருவாக்கி, கற்றலின் தொட்டிலாக அது இருந்து வருகிறது. இது ஒரு கலங்கரை விளக்கமாகவும் செயல்பட்டுள்ளது, இந்தியாவின் தென் பிராந்தியத்தில் பல புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கும் வளர்ச்சிக்கும் முக்கிய பங்கு வகிக்கிறது.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் வளமான வரலாறு மற்றும் பெருமைமிக்க பாரம்பரியம் ஆகியவற்றைக் குறிப்பிட்ட குடியரசுத் தலைவர், இந்த நிறுவனத்தின் முன்னாள் மாணவர்கள் உலகளாவிய சிறப்பு மையமாக அதன் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்க முடியும் என்று கூறினார். அவர்களால் இளம் மாணவர்களுக்கு வழிகாட்ட முடியும். பல்கலைக்கழகத்தின் முன்னேற்றத்திற்காக முன்னாள் மாணவர்களை அணுகி அவர்களின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும் என்றும் அவர் கூறினார்.

சென்னைப் பல்கலைக்கழகம் ஆராய்ச்சி மற்றும் கல்விக் கலாச்சாரத்தை

ஊக்குவித்துள்ளது என்று குடியரசுத் தலைவர் குறிப்பிட்டார். சென்னைப் பல்கலைக்கழகம் அதிநவீன ஆராய்ச்சியில் அதிக முதலீடு செய்ய வேண்டும் என்றும், பல்துறை ஆய்வுகளை ஊக்குவிக்க வேண்டும் என்றும், சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். நாடும் உலகமும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு கற்றல் அடிப்படையிலான தீர்வுகளைக் கண்டுபிடிப்பதில் சென்னைப் பல்கலைக்கழகம் முன்னணியில் இருக்க வேண்டும் என்றார்.

மிகவும் போட்டி நிறைந்த இன்றைய சூழலில், கல்வியில் சிறந்து விளங்குவதற்கான நிர்பந்தம், நல்ல நிறுவனங்களில் சேர முடியாது என்ற அச்சம், மதிப்புமிக்க வேலை கிடைக்காதோ என்ற கவலை மற்றும் பெற்றோர்கள் மற்றும் சமூகத்தின் எதிர்பார்ப்புகளின் சுமை ஆகியவை நமது இளைஞர்களிடையே கடுமையான மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன என்று குடியரசுத் தலைவர் கூறினார். இப்பிரச்னைக்கு தீர்வு காணவும், மாணவர்களின் முழுமையான வளர்ச்சி மற்றும் நல்வாழ்வை ஊக்குவிக்கும் சூழலை உருவாக்கவும் ஒரு சமூகமாக நாம் ஒன்றிணைவது முக்கியம். எந்தவொரு பதட்டத்தையும் மாணவர்களை ஒருபோதும் பாதிக்க அனுமதிக்க வேண்டாம் என்று அவர் வலியுறுத்தினார். அவர்களின் திறமைகள் மீது நம்பிக்கை வைத்து முன்னேற வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

தீர்ப்புக்கு அஞ்சாமல் மாணவர்கள் தங்கள் அச்சங்கள், கவலைகள் மற்றும் போராட்டங் களைப் பற்றி விவாதிக்க வசதியாக உணரும் இருவழி தகவல்தொடர்புகளை ஊக்குவிக்கும் சூழலை கல்வி நிறுவனங்கள் உருவாக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் கூறினார். சவால்களை நம்பிக்கையுடனும் தைரியத்துடனும் எதிர்கொள்வதற்கு நேசிக்கப்படும், மதிக்கப்படும் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட சூழலை நமது இளைஞர்கள் உருவாக்க நாம் ஒன்றிணைந்து செயல்பட முயற்சிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

**முதுமலை புலிகள் காப்பகத்தில் உள்ள தெப்பக்காடு யானைகள் முகாமை பார்வை யிட்ட குடியரசுத் தலைவர், யானைகளைப் பராமரிப்பவர்களுடன் கலந்துரையாடினார்**

முதுமலை புலிகள் காப்பகத்தில் உள்ள ஆசியாவின் பழமையான யானைகள் முகாம்களில் ஒன்றான தெப்பக்காடு யானைகள் முகாமை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று (05.08.2023) பார்வையிட்டார். அத்துடன் யானைகளைப் பராமரிப்பவர்களுடன் (MAHOUTS AND CA-VADIES) அவர் கலந்துரையாடினார்.

அங்கு நடைபெற்ற கலந்துரையாடலின் போது, ஆஸ்கர் விருது பெற்ற "எலிஃபெண்ட் விஸ்பரெர்ஸ்" ஆவணப்படத்தின் மூலம் தமிழக வனத்துறையின் செயல்பாடுகள் மற்றும் அதன் யானைகள் பராமரிப்பு மேலாண்மைக்கு உலகளாவிய அங்கீகாரம் கிடைத்திருப்பது பெருமைக்குரியது என்று குடியரசுத் தலைவர் கூறினார். நமது தேசிய பாரம்பரியத்தைப் பாதுகாப்பதன் ஒரு பகுதியாக, யானைகளைப் பாதுகாப்பது நமது பொறுப்பு என்று அவர் கூறினார். ஆசியாவில் யானைகள் பாதுகாப்பில் முன்னோடியாகத் திகழும் வகையில் தெப்பக்காடு யானைகள் முகாமில் அதிநவீன யானைகள் பாதுகாப்பு மையம் மற்றும் சுற்றுச்சூழல் வளாகம் அமைக்கப்படுவதற்கு அவர் மகிழ்ச்சி தெரி வித்தார்.

இந்தியாவின் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் பழங்குடியின சமூகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்று குடியரசுத் தலைவர் கூறினார். எனவே, அவர்களின் அரசியலமைப்பு உரிமைகளை உறுதி செய்வதும், அவர்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குவதும் மிகவும் முக்கியம் என்று அவர் தெரிவித்தார். தெப்பக்காடு யானைகள் முகாமை நிர்வகிப்பதற்கு, பெட்டக்குறும்பர், காட்டுநாயக்கர் மற்றும் மலசர் பழங்குடி சமூகங்களைச் சேர்ந்த மக்களின் பாரம்பரிய அறிவு மற்றும் அனுபவம் பயன்படுத்தப்படுவதைக் கண்டு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு மகிழ்ச்சி தெரிவித்தார்.

# தமிழகம் முழுவதும் ஆக.25 முதல் காலை உணவு திட்டம் விரிவாக்கம்

## சுதந்திர தின உரையில் முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு



நாடு முழுவதும் சுதந்திர தின விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. சென்னை கோட்டை கொத்தளத்தில் சுதந்திர தினவிழா வெகு விமரிசையாக நடந்தது.

சுதந்திர தின கொடி ஏற்றுவதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காலை 8.48 மணிக்கு போலீசாரின் மோட்டார்சைக்கிள் புடைசூழ கோட்டை கொத்தளத்திற்கு வந்தார்.

அவரை தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா வரவேற்று முப்படை தளபதிகளை அறிமுகம் செய்து வைத்தார்.

அதன் பிறகு போலீஸ் டி.ஜி.பி. சங்கர்ஜிவால், சென்னை போலீஸ் கமிஷனர் சந்தீப்ராய் ரத்தோர், கூடுதல் டி.ஜி.பி. அருண் ஆகியோரையும் அறிமுகப்படுத்தி வைத்தார். இதைத் தொடர்ந்து போலீசாரின் சம்பிரதாய அணிவகுப்பு மரியாதையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏற்றுக் கொண்டார். இதைத் தொடர்ந்து திறந்த ஜீப்பில் ஏறி போலீசாரின் அணி வகுப்பை பார்வையிட்டார்.

கோட்டை கொத்தளம் அருகே சென்றதும் ஜீப்பில் இருந்து இறங்கி கொத்தளத்திற்குள் படிகள் ஏறி விழா நடைபெறும் இடத்துக்கு சென்றார்.

சரியாக 9 மணிக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தேசிய கொடியை ஏற்றி வைத்து வணக்கம் செலுத்தினார். அப்போது வண்ண பலூன்கள் வானில் பறக்க விடப்பட்டன. ஹெலிகாப்டர் மூலம் மலர்கள் தூவப்பட்டது.

காவல் துறையினரின் கூட்டு குழல் இசைக்கப்பட்டது. அப்போது சுதந்திர தின விழாவை காண வந்த அனைவரும் எழுந்து நின்று தேசிய கொடிக்கு வணக்கம் செலுத்தினர்.

இதைத் தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சுதந்திர தின உரை நிகழ்த்தினார். அப்போது அவர் பேசியதாவது:-

இன்னொரு முன்னெடுப்பை இந்த விடுதலை நாளில் அறிவிக்கிறேன். தாய்நாட்டிற்காகத் தங்களுடைய இளம் வயதை நாட்டின் எல்லையில் ராணுவப் பணியில் கழித்து, பணிக்காலம் நிறைவு பெற்று திரும்பும் முன்னாள் ராணுவத்தினர்

பயன்பெறும் வகையில், சுமார் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 ஆயிரம் நபர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கி, திறனை மேம்படுத்தவும், அவர்கள் உரிய பணியில் அமரும் வரையில் தக்க உதவி செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சென்னை போன்ற பெருநகரங்களில் தொடங்கி, பல்வேறு நகரங்களிலும் இன்று நாம் அடிக்கடி காணக்கூடிய காட்சி ஒன்று உள்ளது. ஓலா, ஊபர், ஸ்விகி, சொமட்டோ போன்ற நிறுவனங்களைச் சார்ந்த வாகனங்கள் விரைவாக சேவை வழங்கும் நோக்கத்துடன் பயணிப்பதைக் காணலாம்.

நேரத்தின் அருமை கருதி பணிபுரியும் இத்தகைய பணியாளர்களின் வாழ்க்கை முக்கியமானது. அவர்களின் ஒட்டுமொத்த நலனைப் பாதுகாக்கும் வகையில், அவர்களுக்கென தனியே நல வாரியம் ஒன்று அமைக்கப்படும் என்பதையும் இன்று அறிவிக்கிறேன்.

ஆட்டோ ஓட்டுநர்களாகப் பணிபுரியும் பெண்கள் புதிதாக ஆட்டோ வாங்குவதற்கென ரூ.1 லட்சம் மானியம் வழங்கும் திட்டம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் 141 பேர் பயனடைந்துள்ள நிலையில், தற்பொழுது மேலும் 500 மகளிர் பயன் பெறும் வகையில் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும். மேலும், ஆட்டோ ஓட்டுநர்களாகப் பணிபுரியும் மூன்றாம் பாலினத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இந்தத் திட்டம் விரிவுப்படுத்தப்படும்.

அதுமட்டுமல்ல, சென்னை கதீட்ரல் சாலையில் உள்ள செங்காந்தள் பூங்காவிற்கு அருகில் உள்ள 6.09 ஏக்கர் நிலத்தில் கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா ரூ.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன்.

திட்டங்கள் இல்லாத நாளே இல்லை என சொல்லக்கூடிய வகையில், அரசு அறிவிக்கும் திட்டங்களை கடைக்கோடி மக்களிடமும் கொண்டு போய் சேர்க்கின்ற பெரும் பொறுப்பை ஏற்றிருப்பவர்கள் அரசு ஊழியர்கள்.

ஆட்சி சக்கரம் சுழல்வதற்கு அவர்களே காரணமாக இருக்கிறார்கள். அந்த சக்கரம் வேகமாக சுழல்வதும், மெதுவாக சுழல்வதும் அரசு ஊழியர்களின் கைகளில் தான் உள்ளது. அந்தக் கைகள் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். அப்போதுதான் வேகம் அதிகமாகும் என்பதை எப்போதும் உணர்ந்திருப்பது திராவிட மாடல் அரசு.

எனவே, நடப்பாண்டுகளில் பல்வேறு துறைகளைச் சார்ந்த சுமார் 55 ஆயிரம் பணியிடங்களை நிரப்ப இருக்கிறோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த விழாவில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அனைவருக்குமான அரசு என்பதன் அடையாளமாக இதுபோன்ற திட்டங்களைச் சிந்தித்து சிந்தித்து செயல்படுத்தி வருகிறோம்.

எட்டுக் கோடி மக்களும் ஏதாவது ஒரு விதத்தில் பயனடையும் ஆட்சியை நமது அரசு வழங்கி வருகிறது.

அதைச் செய்தால்தான் நீட் போன்ற கொடூரமான தேர்வுமுறை முற்றிலுமாக அகற்றப்பட முடியும்.

கல்வி, பொருளாதாரம், மருத்துவம், வேளாண்மை, ஏற்றுமதி, திறன்மிகு மனித ஆற்றல் ஆகிய அனைத்து வகையிலும் தமிழ்நாடு சிறப்பான பங்களிப்பை இந்திய நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கும் வழங்கி வருகிறது.

கடந்த ஆண்டு செப்.15ம் தேதி 1 முதல் 5 ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதல்வரின் காலை உணவு திட்டம் தொடங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, வரும் கல்வி ஆண்டு முதல் 31,008 அரசுப் பள்ளிகளில் பயிலும் 15.75 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில், வரும் ஆக.25 ம் தேதி முதல், மாநிலம் முழுவதும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படுகிறது. மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி பயின்ற திருக்குவளை பள்ளியில் இத்திட்டத்தை தொடங்கி வைக்கிறேன். இதற்காக இந்த நிதி ஆண்டில் ரூ.404 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒற்றுமையால் கிடைத்த விடுதலை அதே ஒற்றுமையால் காப்போம். வேற்றுமையை விதைக்கும் சக்திகளை வேரோடு சாய்ப்போம். நாம் இந்தியர்கள் என்ற பெருமையுடன் நம் இந்தியாவை நேசிக்கும் அனைவருக்கும் விடுதலை நாள் நல்வாழ்த்துக்கள்.

விழாவில் தகைசால் தமிழர் விருது, டாக்டர் அப்துல்கலாம் விருது, கல்பனா சாவ்லா விருது, சிறந்த சேவை புரிந்தோருக்கு பல்வேறு விருதுகளையும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வழங்கி கவுரவித்தார். மேலும் மாற்றுத்திறனாளி மாணவர்கள் உள்ளிட்டவர்களுக்கு அவர் இனிப்பு வழங்கினார்.

விழாவில் அமைச்சர்கள், ஐகோர்ட்டு நீதிபதிகள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், வெளிநாட்டு தூதர்கள், அரசு துறை அதிகாரிகள், பொதுமக்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



# 100ல் 14 பேர் உயிரிழப்பு...

## உலகை அச்சுறுத்தும் எரிஸ் வைரஸ்!

2019 இறுதியில் சீனாவில் தொடங்கிய கொரோனா உலகம் முழுவதும் பல்வேறு அலைகளை ஏற்படுத்தி பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி விட்டது. இதனால் உலகம் முழுவதும் கோடிக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர். மெல்ல மெல்ல இயல்பு நிலைக்கு திரும்பி வரும் நிலையில் தற்போது சில நாடுகளில் மீண்டும் கொரோனா வேகமெடுத்து பரவத் தொடங்கியுள்ளதாக அதிர்ச்சி தரும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

**புதிய கொரோனா**

அந்த வகையில் பிரிட்டனில் கொரோனாவின் புதிய வகையான எரிஸ் என்ற வைரஸ் அதிவேகமாக பரவி வருகிறது. இதனை ஒமிக்ரான் வைரஸின் துணை பிரிவாக இந்த எரிஸ் வைரஸ் உள்ளதாக அறிவியலாளர்கள் அறிவித்துள்ளனர். மேலும் இதனை அறிவியல் ரீதியாக ணிநி. 5.1 என மருத்துவ வல்லுநர்கள் அழைக்கின்றனர்.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட 7ல் ஒருவருக்கு இந்த வகை வைரஸ் தாக்குதல் பிரிட்டனில் ஏற்பட்டுள்ளது.ஏற்கனவே பரவிய கொரோனா வகைகளில் தற்போது பரவி வரும் எரிஸ் வைரஸ் அதிக ஆபத்தை ஏற்படுத்தும் திறன் கொண்டவை.

அதே வைரஸ் தாக்கப்பட்டு, சிகிச்சைப் பெற்று வரும் 100 பேரில், 14 பேர் உயிரிழப்புக்குள்ளாவதாக அதிர்ச்சியான தகவலும் உலக மக்களை அச்சுறுத்தி வருகிறது.

**கொரோனா**

முதன் முறையாக ஜூலை 3ம் தேதி கண்டறியப்பட்ட இந்த வைரஸ் தற்போது உலகின் பல்வேறு நாடுகளில் வேகமெடுத்து பரவி வருகிறது. இந்தியாவை பொறுத்தவரை மே மாதமே இத்தகைய வைரஸ்கள் கண்டறியப்பட்டதாக டைம்ஸ் ஆ்ஃப் அதன்படி மகாராஷ்டிராவில் கடந்த மே மாதம் இந்த எரிஸ் வைரஸ் கண்டறியப்பட்டதாகவும், இந்த வைரஸ் இந்தியாவில் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை எனவும் தெரி வித்துள்ளது.

# தமிழ்நாட்டில் காட்டு யானைகள் எண்ணிக்கை உயர்ந்தது: கணக்கெடுப்பு அறிக்கையை முதல்அமைச்சர் வெளியிட்டார்



தமிழ்நாடு அரசு மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளின் காரணமாக தமிழ்நாட்டில் காட்டு யானைகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. ''ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு அறிக்கை 2023'' முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 08.8.2023 அன்று தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் ''ஒருங்கிணைந்த யானைகளின் கணக்கெடுப்பு 2023'' அறிக்கையை வெளியிட்டார். தமிழ்நாடு வனத்துறை அண்டை மாநிலமான கேரளா மற்றும் கர்நாடகா அரசுகளின் ஒத்துழைப்புடன், ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பினை 17.05.2023 முதல் 19.05.2023 வரை நடத்தியது.

இக்கணக்கெடுப்பு, மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள யானைகள் திட்ட இயக்குநரகத்தின் பரிந்துரையின் படி, யானைகளின் எண்ணிக்கையினை நேரடி மற்றும் மறைமுக முறைகளை பயன்படுத்தி கணக்கிடுவதையும், தமிழ்நாட்டின் 26 வனக்கோட்டங்களில் தொகுதி கணக்கிடுதல் முறை மற்றும் நீர்நிலைகளுக்கு அருகில் நேரடியாக காணப்பட்ட யானைகளின் தரவுகளை அடிப்படையாக கொண்டு, யானைகளின் இனத்தொகை கட்டமைப்பினை ஆராய்வதையும் முக்கிய நோக்கமாக கொண்டு நடைபெற்றது. ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு அறிக்கையின்படி, 2017-ல் 2761 ஆக இருந்த யானைகளின் எண்ணிக்கை, தற்போது 2961 ஆக அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டின் நான்கு பிற யானைகள் காப்பகங்களுடன் ஒப்பிடும்போது நீலகிரி கிழக்கு தொடர்ச்சிமலை யானைகள் காப்பகமானது அதிக எண்ணிக்கையில், அதாவது 2477 யானைகளை கொண்டுள்ளது.

இக்கணக்கெடுப்பின் மூலம் ஆண் யானை மற்றும் பெண் யானை சதவிகிதம் 1:2.17 ஆக உள்ளது. கிழக்கு தொடர்ச்சி மலைகளில் 1105 யானைகளும், மேற்கு தொடர்ச்சி மலைகளில் 1855 யானைகளும் உள்ளன. கிழக்கு தொடர்ச்சி மலைகளில் யானைகளின் எண்ணிக்கையை விட மேற்கு தொடர்ச்சி மலைகளில் யானைகள் அதிக எண்ணிக்கையில் உள்ளன. இந்த ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பில் (12.05.2023 முதல் 16.05.2023 வரையில்) பல்வேறு யானை சரகங்களில் 1731 துறைப்பணியாளர் மற்றும் 368 தன்னார்வலர்கள், என மொத்தம் 2099 பேர் இக்கணக்கெடுப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். 3496 சதுர கி.மீ பரப்பளவிலான 690 பிளாக்குகளில் இக்கணக்கெடுப்பு நடைபெற்றது. ஒவ்வொரு 5 சதுர கி.மீ-க்கு கீழுள்ள பல சிறு பிளாக்குகளாக பிரிக்கப்பட்டு, 17.05.2023 அன்று கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

18.05.2023 அன்று யானை பிண்டம் கணக்கெடுப்பு மூலமும் 19.05.2023 அன்று 26 வனக்கோட்டங்களில் நீர்க்குமிழிகள் முறை மூலமும் இக்கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. மேற்கண்ட கணக்கெடுப்பு முறையானது, டேராடூனில் உள்ள இந்திய வன விலங்குகள் நிறுவனம், மயிலாடுதுறை ANC கல்லூரி மற்றும் பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கழகத்தின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டது. தமிழ்நாடு அரசு மேற்கொண்ட பல்வேறு வன உயிரின பாதுகாப்பு நடவடிக்கைகள், குறிப்பாக யானைகள் பாதுகாப்பு இயக்கத்தின் மூலமாக மேற்கொண்ட நடவடிக்கைகள் வாயிலாக தமிழ்நாட்டில் யானைகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அகத்திய மலை யானைகள் காப்பகம், தமிழ்நாடு யானைகள் பாதுகாப்பு இயக்கம், யானைகள் வாழிடங்களை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற தமிழ்நாடு அரசின் நடவடிக்கைகளும் இதற்கு காரணமாக விளங்கின என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வின் போது, வனத்துறை அமைச்சர் மதிவேந்தன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாச ரா. ரெட்டி முதுமலை புலிகள் காப்பக இயக்குநர் டி.வெங்கடேஷ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




உலக யானைகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு 12ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. யானை உலகெங்கிலும் உள்ள மக்கள் மற்றும் கலாச்சாரங்களால் நேசிக்கப்படுகிறது, மதிக்கப்படுகிறது. இருப்பினும் இந்த அற்புதமான உயிரினத்தின் கடைசிப் பகுதியைக் காணும் விளிம்பில் நாம் சமநிலையில் இருக்கிறோம்.


நாம் யானைகளை ஓரளவு போற்றுகிறோம். ஏனென்றால் அவை சிறந்த மனித குணாதிசயங் களாக நாம் கருதுவதை நிரூபிக்கின்றன. பச்சாதாபம், சுய விழிப்புணர்வு மற்றும் சமூக நுண்ணறிவு. ஆனால் நாம் அவர்களை நடத்தும் விதம் மனித நடத்தையின் மிக மோசமான நடத்தையை வெளிப்படுத்துகிறது.

வேட்டையாடுதல், வாழ்விட இழப்பு, மனித-யானை மோதல் மற்றும் சிறைப்பிடிக்கப் பட்ட தவறான சிகிச்சை ஆகியவை ஆப்பிரிக்க மற்றும் ஆசிய யானைகளுக்கு அச்சுறுத்தல்களில் சில. காட்டு யானைகளுக்கு சிறந்த பாதுகாப்பு, சட்டவிரோத வேட்டையாடுதல் மற்றும் தந்தங் களின் வர்த்தகத்தைத் தடுக்க அமலாக்கக் கொள்கைகளை மேம்படுத்துதல், யானைகளின் வாழ்விடங்களைப் பாதுகாத்தல், சிறைப்பிடிக்கப் பட்ட யானைகளுக்கு சிறந்த சிகிச்சை மற்றும், பொருத்தமான போது, இயற்கையான, பாதுகாக் கப்பட்ட சரணாலயங்களில் சிறை பிடிக்கப்பட்ட யானைகளை மீண்டும் அறிமுகப்படுத்துதல் ஆகியவை பல யானைகளைப் பாதுகாப்பதற்கான குறிக்கோள்களாகும். நிறுவனங்கள் உலகம் முழுவதும் கவனம் செலுத்துகின்றன.

உலக யானைகள் தினம் என்பது அமைப்பு களும் தனிநபர்களும் ஒன்றிணைந்து யானைகளை அச்சுறுத்தும் பிரச்சினைகளைப் பற்றி பேசக்கூடிய ஒரு முறையாகும். அதிகாரப்பூர்வ இணையதளத்

தின்படி, யானை தந்தம் மற்றும் பிற வனவிலங்கு பொருட்களை சட்டவிரோதமாக வேட்டையாடுதல் மற்றும் வர்த்தகம் செய்வதை தடுக்கவும், காட்டு யானைகளின் வாழ்விடத்தை பாதுகாக்கவும், வளர்ப்பு யானைகளுக்கு சரணாலயங்கள் மற்றும் மாற்று வாழ்விடங்களை வழங்கவும் செயல்படும் அமைப்புகளுக்கு ஆதரவளிக்க மக்கள் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சுதந்திரமாக வாழ வேண்டும்.”

* யானைகள் தினம் நாம் அனைவரும் கைகோர்த்து இந்த உலகத்தை யானைகள்




வாழ பாதுகாப்பான இடமாக மாற்ற வேண்டும் என்பதை நினைவூட்டுகிறது.

* யானைகள் கிரகத்தில் உள்ள அழகான மற்றும் மிகவும் நட்பு விலங்குகளில் ஒன்றாகும், அவற்றை நாம் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

* யானைகள் எல்லா குழந்தைகளுக்கும் மிகவும் பிரியமான விலங்கு மற்றும் காப்பாற்றப்பட வேண்டும். இந்த உலகத்தை காப்பாற்ற யானைகளை காப்பாற்றுங்கள்.

அவை பெரியவை, அழகானவை ஆனால் அவை மிகவும் மதிப்புமிக்கவை. அழிந்து வரும் யானைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

* உலகில் குறைந்து வரும் யானைகளின் எண்ணிக்கை குறித்த விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தும் விதமாகவும், யானை தந்தங்களை சட்டவிரோதமாக வேட்டையாடுதல் மற்றும் வர்த்தகம் செய்வதை தடுக்கவும், காட்டு யானைகளின் வாழ்விடத்தை பாதுகாக்கவும், வளர்ப்பு யானைகள் சுதந்திரமாக வாழ்வதற்கு வழிவகுக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 12ஆம் தேதி உலக யானைகள் தினமாக கொண்டாடப்படுகிறது.

உலகில் ஆப்பிரிக்க யானைகள், ஆசிய யானைகள் என்று யானைகள் இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆசிய யானைகள் இந்தியா, இலங்கை, நேபாளம், தாய்லாந்து, இந்தோனேஷியா உள்ளிட்ட 13 நாடுகளில் வசிக்கின்றன. ஆப்பிரிக்க யானைகள் ஜிம்பாப்வே, நமீபியா, போட்ஸ்வோனா உள்ளிட்ட நாடுகளில் வசிக்கின்றன.

* யானைகளின் சராசரி ஆயுட்காலம் சுமார் 70 ஆண்டுகள் ஆகும். 7 அடி முதல் 12 அடிவரை உயரமும் 5 ஆயிரம் கிலோ வரை எடையும் கொண்டவையாகும். யானையின் தும்பிக்கையில் மனிதனின் மொத்த உடலில் உள்ள சதையைவிட அதிக சதை உள்ளது. இதன் மூலம் 1.5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மனிதனின் நடமாட்டத்தை கூட அறிய முடியும்.

* யானையின் இரு தந்தங்களும் 90 கிலோ வரை எடை கொண்டிருக்கும். ஆசிய பெண் யானைகளுக்கு தந்தம் இருக்காது. ஆப்ரிக்கா பெண் யானைகளுக்கு தந்தம் உண்டு. யானையின் தந்தம் ஒரு முறை உடைந்தால் மீண்டும் வளராது.

* யானைகள் 18-22 மாதங்கள் கர்ப்பமாக இருந்து குட்டியை ஈன்றெடுக்கும். ஒரு குட்டி யானை பிறக்கும் போது 80 முதல் 120 கிலோ எடையுள்ளதாக இருக்கும். ஒரு குட்டி யானை பிறந்தாலும் அவை கூட்டமாக வந்து பார்க்கும். ஒரு யானை இறந்துவிட்டாலும் 50, 60 யானைகள் கூட்டமாக வந்து பார்த்து தடவிவிட்டுச் செல்லும். ஒவ்வொன்றுக்கும் இடையில் அவ்வளவு பிணைப்புகள் இருக்கும்.

* காடுகள் வளமாக இருப்பதற்கும் விதைப் பரவலுக்கும் யானைகள் முக்கிய காரணிகளாக உள்ளன. யானைகள் இலை, செடி, கொடி, மூங்கில், கரும்புகளை விரும்பி உண்ணும். நாளொன்றுக்கு 200 முதல் 250 கிலோ இலை, தழைகளை சாப்பிடும். 150 முதல் 200 லிட்டர் வரை தண்ணீரையும் உட்கொள்கிறது.

* கடந்த 2017 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் படி இந்தியா முழுவதும் 29964 யானைகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் மட்டும் 2761 யானைகள் உள்ளதாக அந்த கணக்கீடு தெரிவிக்கிறது.

யானைகள் அழிந்தால் காடுகள் அழியும். காடுகள் அழிந்தால் மொத்த விலங்கினம், மனிதர்கள் வாழவே முடியாது. இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், யானைகளை பாதுகாக்கவும் இந்த நாள் கொண்டாடப்படுவதற்கான முக்கிய நோக்கம் ஆகும்.



# நிலா இல்லை என்றால் பூமி என்ன ஆகும்?

நிலாவை ஆய்வு செய்வதற்கான இந்தியாவின் சந்திரயான் -3 விண்கலத் திட்டம் முக்கியக் கட்டத்தை எட்டியுள்ளது. விண்கலத்தில் இருந்து விக்ரம் லேண்டர் எனப்படும் தரையிறங்கும் பகுதி மட்டும் பிரிந்து சென்றிருக்கிறது.

தனியாகப் பிரிந்த விக்ரம் லேண்டர் தன்னுடைய தனிப் பாதையில் நிலாவைச் சுற்றத் தொடங்கிவிட்டது. இதன் பிறகு படிப்படியாக உயரம் குறைக்கப்பட்டு தரையிறங்குவதற்கு பணிகள் தொடங்கும். இஸ்ரோவின் திட்டப்படி இன்னும் ஆறு நாட்களில் விக்ரம் லேண்டர் நிலாவின் தரையைத் தொட வேண்டும்.

நிலா குறித்த ஆய்வில் சந்திரயான் -3 திட்டம் ஒரு மைல் கல்லாக பார்க்கப்படும் நிலையில், நிலா தொடர்பாக பொதுவாக நமக்கு எழும் சந்தேகங்கள், அதற்கான விளக்கங்களை இந்த கட்டுரையில் காணலாம்.

**நிலா எப்படி தோன்றியது?**

நம்மில் அனைவருக்கும் பொதுவாக இருக்கும் ஒரு சந்தேகம் இது. இதற்கான தெளிவான பதில் என்பது கிடையாது. நிலாவின் தோற்றம் தொடர்பாக பல்வேறு கோட்பாடுகள் நிலவுகின்றன. ஆனால் அனைத்துமே ஒரே கருத்தையே கூறுகின்றன.

சூரிய குடும்பம் உருவான நேரத்தில், சுமார் 4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, செவ்வாய் கிரகம் அளவில் உள்ள ஒரு பொருள் அல்லது பல பொருட்கள் பூமியின் மீது மோதியதாகவும் அதில் தோன்றிய குப்பைகள் எல்லாம் விண்வெளிக்கு சென்று நிலவாக மாறியது என்பது பரவலாக அனைவராலும் ஏற்றுகொள்ளப்பட்ட கோட்பாடு.

**நிலா இல்லையென்றால் பூமிக்கு என்ன ஆகும்?**

நிலாவின் புவியீர்ப்பு விசைதான் பூமியை அதன் அச்சில் வைத்திருக்க பெரிதும் உதவுகிறது. ஒருவேளை நிலா இல்லை யென்றால், அது பூமியின் கடல் அலைகள் உயரத்தில் மாறுபாட்டை ஏற்படுத்தும். ஓதங்களில் (Tides)மாறுபாடு ஏற்படும். ஏன், ஒரு நாளின் நீளம் கூட மாறலாம்.

இதேபோல், பூமியின் காலநிலை, தட்ப வெப்பம் ஆகியவற்றிலும் குறிப்பிடத்தக்க விளைவுகள் ஏற்படக்கூடும்.

**பூமியில் இருந்து எவ்வளவு தூரத்தில் நிலா இருக்கிறது?**

தற்போதைய கணக்குபடி, பூமியில் இருந்து 3,84,400 கிலோ மீட்டர் தொலைவில் நிலா இருக்கிறது. ஆனால், 3.2 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் இருந்து 2,70,000 கிலோ மீட்டர் தொலைவில் நிலா இருந்ததாக சமீபத்திய ஆய்வு ஒன்று பரிந்துரைத்தது.

அதாவது, தற்போது உள்ள தூரத்தோடு ஒப்பிடும்போது, 100க்கு 70% தூரத்தில் நிலா இருந்ததாக அந்த ஆய்வு கூறுகிறது. அப்போது பூமி வேகமாக சுழன்றதால் ஒரு நாளுக்கான காலம் குறைவாக இருந்தது.

**நிலாவில் என்ன இருக்கிறது?**

நிலா என்பது பாறைகள் மற்றும் தாதுக்களால் ஆனது என்று கூறுகிறார் பிர்லா கோளரங்கத்தின் செயல் இயக்குநர், இ.கி. இலெனின் தமிழ்க்கோவன். மேலும், “ முக்கியமாக சிலிகேட்டுகளால் ஆனது. வளிமண்டலம் கிடையாது.

அதன் மேற்பரப்பு அம்சங்களில் எரிகல் பொழிவு தாக்கி பள்ளங்கள், மலைகள், பள்ளத்தாக்குகள் மற்றும் மரியா எனப்படும் பெரிய, தட்டையான கடல் போன்ற அதேவேளையில் நீரற்ற பகுதிகள் உள்ளன ” என அவர் குறிப்பிடுகிறார்.

இதேபோல் பன்னெடுங்காலம் முன்னர் தோன்றிய எரிமலையின் வாயில்களும் நிலாவில் உள்ளன.

**நிலா பிரகாசமாக மின்னுவது எப்படி?**

பௌர்ணமி நாட்களில் நிலா பிரகாசமாக மின்னுவதை நாம் பார்த்து வியந்திருப்போம். ஆனால், அது நிலவொளி அல்ல சூரிய ஒளி என்று சொன்னால் உங்களால் நம்ப முடியுமா?

ஆனால், அதுதான் உண்மை. தனக்கான ஒளியை நிலாவால் உருவாக்க முடியாது. தன் மீது விழும் சூரிய ஒளியையே நிலா பிரதிபலிக்கிறது.

**நிலா என்ன நிறத்தில் இருக்கும்?**

நாம் பூமியில் இருந்து பார்க்கும்போது நிலா பிரகாசமாக தோன்றும். அதை பார்த்து நிலா வெள்ளை நிறத்தில் இருப்பதாக நாம்மில் பலர் நினைத்திருப்போம். ஆனால், நிலா உண்மையில் வெள்ளை நிறத்தில் இருப்பதில்லை. சூரியனின் வெளிச்சத்தை பிரதிபலிப்பதாலேயே நிலா பிரகாசமாக இருக்கிறது என்று நாம் ஏற்கனவே பார்த்தோம். நிலாவின் அருகில் சென்று பார்க்கும்போது அது அடர் சாம்பல் நிறத்தில் உள்ளது.

**நிலாவில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டவை என்ன?**

நிலாவில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பயணங்கள் மூலம் அதன் புவியியல், மேற்பரப்பு அமைப்பு மற்றும் வரலாறு தொடர்பான முக்கியத் தகவல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது குறித்து இலெனின் தமிழ்க்கோவன் கூறுகையில், “குறிப்பாக, நிலாவில் நீர் இருப்பதாக நமது சந்திரயான் ஒன்று ஆய்வுக்கலமும் உறுதி செய்துள்ளது. நாசாவின் அப்பல்லோ பயணங்கள் மூலம் பாறை மாதிரிகள் பூமிக்கு கொண்டு வரப்பட்டது பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.” என்றார்.

இதேபோல், நிலாவில் இருந்து எடுத்துவரப்பட்ட மண்ணில் தாவரங்களை கடந்த ஆண்டு விஞ்ஞானிகள் வளர்த்தனர்.

**நிலாவில் மனிதர்களின் எடை குறைவது ஏன்?**

பூமியில் உள்ள ஒரு பொருள், நிலவில் அதே எடையில் இருப்பதில்லை என்கிறார் இலெனின் தமிழ்க்கோவன் .

“எடுத்துக்காட்டாக, ஒரு நபரின் எடை 80 கிலோ என்று வைத்துக்கொள்வோம். நிலவில் அவரது எடை 13.3 கிலோவாகதான இருக்கும். இதற்கு காரணம் நிலவின் ஈர்ப்பு விசை. பூமியின் ஈர்ப்பு விசையுடன் ஒப்பிடும்போது நிலவின் ஈர்ப்பு விசை 6 ல் ஒரு பங்கு மட்டுமே இருக்கும். இதனால்தான் நிலவில் எடை குறைவு ஏற்படுகிறது . அதே நேரத்தில் உங்கள் நிறை (Mass) பூமியில் எப்படி உள்ளதோ அப்படியே தான் இருக்கும் ” என விளக்குகிறார்.

**நிலவில் இதுவரை எத்தனை முறை மனிதர்கள் இறங்கியுள்ளனர்?**

1969 மற்றும் 1972 க்கு இடையில் அமெரிக்காவின் அப்பல்லோ திட்டத்தின் ஒரு பகுதியாக மனிதர்கள் மொத்தம் ஆறு முறை நிலவில் இறங்கியுள்ளனர். கடைசியாக மனிதர்கள் நிலவுக்கு சென்றது டிசம்பர் 1972 இல் அப்பல்லோ 17 பயணத்தின் போதுதான்.

அதற்குப் பிறகு, நிலவுக்கு மனிதர்கள் பயணம் செய்யவில்லை. இதற்கு நிதி கட்டுப்பாடுகள் மற்றும் விண்வெளி ஆய்வு பற்றிய கருத்துகள் ஆகியவை முக்கிய காரணங்களாக சொல்லப்படுகின்றன.

**நிலாவில் உருவங்கள் தோன்றுவதாக நினைத்தது உண்டா?**

ஒருசிலர் நிலாவில் மனிதர்கள் போன்றோ, விலங்குகள் போன்றோ உருவங்கள் தெரிவதாக கூறியிருக்கலாம். ஏன், உங்களுக்கே கூட அப்படி தோன்றியிருக்கலாம். இதற்கு காரணம் என்ன?

நிலாவில் உள்ள பழமையான, கடினமான எரிமலைக் கடல்கள் பசால்ட் பாறைகளால் உருவானவை. எனவே, இந்த பகுதிகள் குறைந்த அளவிலேயே வெளிச்சத்தை பிரதிபலிக்கும். மாறாக நிலவில் உள்ள மலைமேடுகள் அதிகளவு வெளிச்சத்தை பிரதிபலிக்கும். அதனை பார்க்கும்போது நமக்கு எதோ ஒரு உருவம் போல் தோன்றுகிறது என நாசா கூறுகிறது.

**நிலாவில் மனிதர்கள் வாழ்வதற்கு சாத்தியக் கூறுகள் உள்ளதா?**

இலெனின் தமிழ்க்கோவன் இதற்கு பதிலளிக்கும்போது,

“நிலவில் மனிதர்கள் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் இன்னும் ஆய்வு செய்யப்படுகின்றன. பூமி போன்று இயல்பாய் சுவாசிக்கக்கூடிய வளிமண்டலம் இல்லாதது, தீவிர வெப்பநிலை மாறுபாடுகள் (அதாவது பகலில் மிக அதிக வெப்பநிலையும் இரவில் கடும் குளிரும் நிலவுவது), காற்று மண்டலம் இல்லாததால் விண்புறப்பரப்பு கதிர்வீச்சு அதிகமாக இருப்பது போன்றவை மனிதர்கள் வசிக்க முடியாத சூழலுக்கான காரணங்களாக முன்வைக்கப்படுகின்றன” என்றார்.

இதேபோல் எளிதல் பயன்படுத்தக்கூடிய நீர் இல்லாததும் ஓர் குறைபாடாக பார்க்கப்படுகிறது. இருப்பினும், “ விஞ்ஞானிகள் குறுகிய காலம் தங்குவதற்கு அல்லது அறிவியல் ஆராய்ச்சிக்காக சந்திர தளங்களை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருகின்றனர். ” என்றும் அவர் தெரிவிக்கிறார்.

- Source by BBC Tamil

# சுனாமி அலை சீற்றத்தை தடுக்கும் அலையாத்தி காடுகளை பாதுகாப்பு!

கடல் அரிப்பு, சுனாமி பேரலை சீற்றத்தை தடுப்பதற்கு அடிப்படை ஆதாரமாக உள்ள அலையாத்தி காடுகள் குறித்த விழிப்புணர்வு பிரசாரத்தை தீவிரப்படுத்த ஆண்டு தோறும் ஜூலை 26ல் அலையாத்தி காடுகள் பாதுகாப்பு தினம் கொண்டாடப்படுகிறது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் தொண்டி காரங்காடு, திருப்புல்லாணி, கீழக்கரை உள்ளிட்ட பகுதிகளில் 556 எக்டேரில் அலையாத்தி வகைகளில் ஒன்றான அவிசீனியா மெரைனா வகை மாங்குரோவ் காடுகள் வளர்க்கப்படுகிறது.

மணல் மேடாகி போன நிலங்களை சுத்தம் செய்து கால்வாயை தூர்வாரி சீரமைத்து இவை வளர்க்கப்படுகிறது. இதனால் வனப்பரப்பு அதிகமாகும். உயிரினங்கள் பெருகும். நிலத்தடி நீர் உவர்ப்புத்தன்மை மாறுகிறது. மழைப் பொழிவும் கிடைக்கிறது.

கடலில் சுனாமி பேரலையின் சீற்றத்தை தடுப்பதில் மாங்குரோவ் காடுகளின் பங்கு அதிகளவில் உள்ளது. கடற்கரையோரங்களில் கோடிகளை செலவிட்டு கொட்டப்படும் கான்கீரிட் கற்களைவிட ஆயிரம் மடங்கு மேலானவை அலையாத்திகாடுகள்.

நத்தைகள் சேறு, நண்டு சிங்கி, இறால் பால், கடற்புல், ஆக்காட்டி குருவி, வெண்கொக்கு, ஊரிநாரை, கண்டற்சிப்பி, மீனினங்கள் என ஆயிரக்கணக்கான உயிர்களின் உறைவிடமாக இருப்பவை.

இத்தகைய சிறப்பு மிக்க மாங்குரோவ் காடுகள் தொண்டி அருகே உள்ள காரங்காடு பகுதியில் கடலுக்குள் அமைந்துள்ளன. இப்பகுதியில் கடல் பசு, கடல் குதிரை, கடல் பாசி உள்ளிட்ட கடல்சார் வன உயிரினங்கள் வாழ்கின்றன.

ராமநாதபுரம் மன்னார் வளைகுடா கடல்வாழ் உயிரின காப்பகம் சார்பில், சுற்றுலா பயணிகளை



கவர்ந்திடும் நோக்கில் வனத்துறை ஒருங் கிணைப்போடு காரங்காடு சூழல் மேம்பாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மாங்குரோவ் காடுகளை பார்வை யிட படகு சவாரி ,கயாக்கின் எனப்படும் துடுப்பு படகு சவாரி, ஸ்நார்கிங் எனப்படும் தண்ணீருக்கு அடியிலுள்ள உயிரினங்களை கண்டுகளிப்பது போன்ற பொழுது போக்கு அம்சங்கள் உள்ளன.

ராமநாதபுரம் மாவட்ட உதவி வன அலுவலர் ந.சுரேஷ்குமார் கூறியதாவது:-

மாங்குரோவ் காடு வளர்ப்பதில் தனிக்கவனம் செலுத்துகிறோம். வனகாப்பாளர் பகான் ஜக்தீஸ் சுதாகர் மேற்பார்வையில் கூடுதலாக மாங்குரோவ் செடிகள் வளர்க்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தொண்டி காரங்காடு சுற்றுச்சூழல் மையம் காலை 11:00 மணி முதல் மாலை 4:00 மணி வரை சுற்றி பார்க்கலாம்.கண்காணிப்பு கோபுரம் மேல் இருந்து பல வகையான உள், வெளி நாட்டு பறவைகளை கண்டுகளிக்கலாம். கடலில் பயணம் செய்யபெரியவர்களுக்கு ரூ.200, சிறியவர்களுக்கு ரூ.100 கட்டணம் செலுத்த வேண்டும்.




‘நீட்’ தேர்வை ஏற்றுக்கொண்டு, தமிழக மாணவர்கள் முன்னிலை பெற்று வரும் நிலையில், மாணவர்களும், பெற்றோரும் போலி பரப்புரைகளையும், வாக்குறுதிகளையும் நம்பவேண்டாம். ‘நீட்’ தேர்வை நிறுத்துவதற்கு இனி வாய்ப்பில்லை என, அண்ணா பல்கலை முன்னாள் துணைவேந்தர் தெளிவுபடுத்தியுள்ளார்.

அண்ணா பல்கலை முன்னாள் துணைவேந்தர், கல்வியாளர் பாலகுருசாமி கூறியுள்ளதாவது:

எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., ஆகிய மருத்துவ படிப்புகளில் சேர தேசிய திறனறி முகமை, ‘நீட்’ தேர்வை நடத்துகிறது. நுழைவுத்தேர்வு அவசியம் என உச்சநீதிமன்றமும், தேசிய மருத்துவ ஆணையமும் அறிவித்துவிட்டதால், இனிமேல் ‘நீட்’ தேர்வை நிறுத்த வாய்ப்பில்லை. மருத்துவம் படிக்க விரும்பும் மாணவர்கள் தேர்வுக்கு தொடர்ந்து தயார்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகியுள்ளது.

சில தலைவர்கள் போலியாகவும், சுயலாபத்திற்காகவும் வாக்குறுதிகளை கொடுக்கின்றனர். நீட் தேர்வின் அவசியத்தை சரியான முறையில் புரிந்துகொள்ளாதவர்கள் இதனை எதிர்த்து வருகின்றனர்; மருத்துவ கல்வியின் தரம், நுழைவுத்தேர்வின் அவசியம் குறித்த நுட்பமான பார்வை அவர்களிடம் இல்லை என்பதே உண்மை நிலவரம்.

**‘நீட்’ தேர்வு தேவை**

உலகம் முழுவதும் உள்ள அனைத்து உயர்கல்வி நிறுவனங்கள், பல்கலைகளில் மாணவர்கள் சேர்க்கையில், நுழைவுத் தேர்வு நடைமுறை ஓர் அம்சமாகவுள்ளது. இத்தேர்வுகள் அனைவருக்கும் பொதுவான தரத்தை அடிப்படையாக கொண்டு நடத்தப்படுகிறது. 30க்கும் மேற்பட்ட மாநிலங்களை கொண்ட இந்தியா போன்ற பெரிய நாட்டில், பல்வேறு வாரியத்தின் கீழ் மாணவர்கள் படிக்கின்றனர்.

இந்நிலையில், ஒரு படிப்பில் சேர்வதற்குத் தேவையான குறைந்தபட்ச கல்வித் தரத்தை உறுதி செய்து, அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கும் வகையில், பொதுவான ஒருங்கிணைந்த வலிமையான நுழைவுத்தேர்வு கட்டாயமாகிறது. இத்தேர்வு வாயிலாக, நாட்டின் எந்தப் பகுதியிலும் எந்தக் கல்வி நிறுவனத்திலும் சேரும் வாய்ப்பு உண்டு. இதனால், மாநில அரசின் இடஒதுக்கீட்டிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. இம்மதிப்பெண்ணை வைத்து, வெளிநாடுகளில் கல்விநிறுவனங்களில் சேரவும் வழி செய்யப்படுகிறது.

'நீட்' தேர்வு முறையை முதலில், 2005-06ம் ஆண்டில் அறிமுகம் செய்தது காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுதான். அதில், தி.மு.க., அரசும் இடம் பெற்று இருந்தது குறிப்பிடத்தக்கது. எனவே, பா.ஜ., கொண்டு வந்ததாக கூறுவது தவறானது. பின்னர் சட்ட சிக்கல்களால் அத்தேர்வு ரத்து செய்யப்பட்டது. உச்சநீதிமன்றத்தின் இறுதியான தெளிவான தீர்ப்பை அடுத்தே, பா.ஜ., தலைமை யிலான அரசு, 2016ம் ஆண்டு நீட் தேர்வை நடைமுறைக்கு கொண்டுவந்தது. இதில், அரசியல் காரணங்களுக்காக தவறான பரப்புரை செய்யப்படுகிறது.

**தோல்விக்கு யார் காரணம்**

'நீட்' தேர்வு கடினமாக தோன்ற, 2006ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சமச்சீர் கல்வி பாடத்திட்டமும், பிளஸ் 1 பாடத்தை நடத்தாமல் பள்ளிகள் பிளஸ் 2 பாடத்தை மட்டும் பொதுத்தேர்வுக்காக தயார்படுத்தியதே காரணம். அண்மையில், பள்ளி பாடத்திட்டம் மத்திய கல்வி வாரிய பாடத்திட்டத்திற்கு இணையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அரசு பள்ளி மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்பது ஏற்க முடியாத வாதம், அரசு பள்ளிகளில் கற்றல், கற்பித்தல் தரத்தை மேம்படுத்தவேண்டுமே தவிர; அதை முன்வைத்து நுழைவுத்தேர்வை எதிர்ப்பது சரியல்ல.




மேலும், பயிற்சி மையங்கள் வருவதற்கு காரணமாக உள்ளது என்பது தவறான புரிதல், அதற்கு முன்பே பொறியியல் நுழைவுத்தேர்வுக்கான பயிற்சி மையங்கள் செயல்பாட்டில் உள்ளன. எல்.கே.ஜி., முதல் பிளஸ் 2 வரை 'டியூசன்' என்ற பெயரில் தனியார் பயிற்சி மையங்கள் காலம் காலமாக இருக்கிறது. பிளஸ் 2 தேர்வுக்கு மாணவர்களை அடைத்து வைத்து பயிற்சிகளும் அளிக்கப்படுவதுடன்; கூடுதல் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது.

**தற்கொலை தீர்வல்ல**

'நீட்' தேர்வு தற்கொலைக்கு வழிவகுக்கிறது என்பது சரியான வாதம் அல்ல. இதனால், சில மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டனர் என்பது உண்மை. அதை வைத்து தேர்வே வேண்டாம் என்பது சரியல்ல. அப்படியானால், பத்தாம் வகுப்பு, பிளஸ் 2 பொதுத்தேர்வில் தோல்வியடைந்தவர்களும், குறைந்த மதிப்பெண் பெற்றவர்களும் விபரீத முடிவை தேடிக்கொண்ட துயரமான நிகழ்வுகளும் உண்டு.

அதற்காக, பொதுத்தேர்வு முறைகளை ரத்து செய்ய இயலுமா. மாணவர்கள் இத்தகைய விபரீதமான முடிவுகளை கைவிடவேண்டும். அதிக விழிப்புணர்வு மாணவர்களிடம் ஏற்படுத்தவேண்டியது அவசியம். இவ்வாறு பாலகுருசாமி கூறியுள்ளார்.






## குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பதவியேற்று ஓராண்டு நிறைவடைவதையொட்டி குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில்

# பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்தார்

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு குடியரசுத் தலைவராகப் பதவியேற்று இன்றுடன் (25.07.2023) ஓராண்டு நிறைவடைகிறது. இது தொடர்பாக குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட திருமதி திரௌபதி முர்மு, தொழில்நுட்பத்தின் மூலம் குடியரசுத் தலைவர் மாளிகை கடந்த ஓராண்டில் அதிகமான மக்களுடன் தொடர்பு கொண்டிருப்பதாக மகிழ்ச்சி தெரிவித்தார். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த அமைப்பை மிகவும் வெளிப்படையானதாகவும் பயனுள்ளதாகவும் மாற்ற குடியரசுத் தலைவர் மாளிகை அதிகாரிகள் தொடர்ந்து பணியாற்றுவார்கள் என்று அவர் கூறினார்.

குடியரசுத் தலைவராகப் பதவியேற்று ஓராண்டு நிறைவடைவதையொட்டி, திருமதி திரௌபதி முர்மு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

அவை:

1. குடியரசுத் தலைவர் மாளிகையின் தோட்டத்தில் அமைந்துள்ள சிவன் ஆலய சீரமைப்புக்கு குடியரசுத் தலைவர் அடிக்கல் நாட்டினார்

2. குடியரசுத் தலைவர் மாளிகையின் தோட்டத்தில் உள்ள டாக்டர் ராஜேந்திர பிரசாத் கேந்திரிய வித்யாலயா விளையாட்டு மைதானத்தில் கிரிக்கெட் அரங்கம் கட்ட அடிக்கல் நாட்டினார்

3. இன்டெல் இந்தியாவுடன் இணைந்து குடியரசுத் தலைவர் மாளிகையில் உருவாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தில் இயங்கும் காட்சியகமான நவச்சாரா திறந்து வைக்கப்பட்டது. இந்த காட்சியகம் மாணவர்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு வல்லுநர்களால் உருவாக்கப்பட்ட அதிவேக கண்டுபிடிப்புகள் மற்றும் உள்நாட்டு செயற்கை நுண்ணறிவு தீர்வுகளை காட்சிப்படுத்துகிறது.

4. குடியரசுத் தலைவர் மாளிகையின் ஜவுளித் தொகுப்புகள் அடங்கிய கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது. இந்த காட்சியகம் குடியரசுத் தலைவர் மாளிகையின் புகழ்பெற்ற பாரம்பரியத்தை ஆவணப்படுத்தும் பழங்கால ஜவுளிகளின் தொகுப்பை காட்சிப்படுத்துகிறது.

5. ஜன்ஜாதியா தர்பன் எனப்படும் பல்வேறு பழங்குடி சமூகங்களின் கலாச்சார பண்புகளை வெளிப்படுத்தும் ஒரு காட்சியகம் குடியரசுத் தலைவர் மாளிகையில் திறக்கப்பட்டது. வளமான கலை, கலாச்சாரம் மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பழங்குடி சமூகங்களின் பங்களிப்புகள் பற்றிய ஒரு பார்வையை வழங்குவதே இந்த கண்காட்சியகத்தின் நோக்கமாகும். பழங்குடியின சுதந்திரப் போராட்ட வீரர்கள், பாரம்பரிய இயற்கை வள மேலாண்மை



**ஓராண்டு பதவிக் காலம் குறித்த மின் நூலையும் வெளியிட்டார்**

நடைமுறைகள், இசைக்கருவிகள், விவசாயம் மற்றும் வீட்டு உபகரணங்கள், மூங்கில் கூடைகள், துணிகள், நகைகள், உலோக வேலைப்பாடுகள் போன்ற பல்வேறு கருப்பொருள்கள் இந்த கண்காட்சியகத்தில் உள்ளன. இந்திரா காந்தி தேசிய கலை மையத்துடன் (ஐ.ஜி.என்.சி.ஏ) இணைந்து குடியரசுத் தலைவர் மாளிகையால் இந்த அருங்காட்சியகம் நிறுவப்பட்டுள்ளது.

6. குடியரசுத் தலைவர் மற்றும் குடியரசுத் தலைவர் மாளிகையின் மறுவடிவமைக்கப்பட்ட இணையதளத்தை குடியரசுத் தலைவர், அதிகாரிகள் முன்னிலையில் தொடங்கி வைத்தார். கடந்த ஒரு ஆண்டு கால பதவிக் கால நிகழ்வுகளின் தொகுப்பு மின்னூலாகவும் வெளியிடப்பட்டது (மின்நூல் இணையதள இணைப்பு: https://rb.nic.in/rbebook.htm

7. குடியரசுத் தலைவர் மாளிகையின் தோட்டத்தில் உள்ள ஆயுஷ் நல்வாழ்வு மையம் குறித்த புத்தகத்தின் முதல் பிரதியை குடியரசுத் தலைவர் பெற்றுக் கொண்டார்.

இந்த விழாவில் உரையாற்றிய குடியரசுத் தலைவரின் செயலாளர், குடியரசுத் தலைவர் மாளிகை கடந்த ஓராண்டில் மக்களை மையமாகக் கொண்ட பல முன்முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்று கூறினார். இந்த முன்முயற்சிகளில் குடியரசுத் தலைவரின் வழிகாட்டுதல் மற்றும் ஆதரவுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

# ரயிலில் பெண்கள் பாதுகாப்புக்கு மத்திய அரசு அதிரடி நடவடிக்கை



இந்தியாவில் ரயிலில் பெண் பயணிகளின் பாதுகாப்புக்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. 7264 ரயில் பெட்டிகள் மற்றும் 866 ரயில் நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்கள் மூலம் பயணிகளின் பாதுகாப்பு தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாமல் சுவரொட்டிகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் வினியோகம் மூலம் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் பயணத்தின் போது தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது குறித்து பயணிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நெருக்கடியில் உள்ள பயணிகளுக்கு பாதுகாப்பு தொடர்பான உதவிகளுக்காக இந்திய ரயில்வேயில் ரயில்வே உதவி எண் 139 செயல்படுகின்றது. ரயில் பாதுகாப்பு குழுக்களில் ஆண் மற்றும் பெண் ஆர்பிஎப் மற்றும் rpsf பணியாளர்களின் சரியான ஒருங்கிணைந்த எண்ணிக்கையை முடிந்தவரை நியமிக்க மண்டல ரயில்வேக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட பெட்டிகளில் ஆண் பயணிகள் நுழைவதற்கு எதிராக சோதனைகளும் நடத்தப்படுகின்றன. தற்போது இந்தியாவில் ரயிலில் பயணிக்கும் போது எந்த பிரச்சனையும் இல்லாமல் நிம்மதியாக பெண்கள் பயணிக்கும் வகையில் அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரி வித்துள்ளது.

# ‘எனது வங்கம், போதையில்லா வங்கம்‘


## பிரச்சாரத்தைக் குடியரசுத் தலைவர் தொடங்கி வைத்தார்

‘போதைப்பொருள் இல்லாத இந்தியா’ திட்டத்தின் கீழ் பிரம்மா குமாரிகள் ஏற்பாடு செய்திருந்த ‘எனது வங்கம், போதை யில்லா வங்கம்‘ பிரச்சாரத்தைக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று (ஆகஸ்ட் 17, 2023) கொல்கத்தா ஆளுநர் மாளிகையில் தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய குடியரசுத் தலைவர், போதைப்பொருளைப் பயன்படுத்துதல் சமூகத்திற்கும் நாட்டிற்கும் தீங்கு விளைவிப்பதாகும். இந்தப் பழக்கத்திற்கு அடிமையாவதால், இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையில் சரியான திசையைத் தேர்வு செய்ய முடிவதில்லை. இது மிகவும் கவலைக்குரியது. இதனை மாற்ற அனைத்து முனைகளிலும் செயல்பட வேண்டிய அவசியம் உள்ளது. ஆன்மீக விழிப்புணர்வு, மருந்து, சமூக ஒருமைப்பாடு, அரசியல் உறுதி ஆகியவற்றின் மூலம் இந்த நிலைமையை மாற்ற முடியும் என்று அவர் கூறினார். பிரம்மா குமாரிகள் போன்ற அமைப்புகள் இதுபோன்ற பிரச்சனைகளை விவாதித்து அவற்றுக்குத் தீர்வுகாண உழைப்பதை அவர் பாராட்டினார்.

மன அழுத்தம் மற்றும் மற்றவர்களின் வற்புறுத்தல் காரணமாக போதைப்பழக்கம் உருவாகிறது என்று அவர் கூறினார். அடிமையாதல் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும். வேறு பல கோளாறுகளும் இதிலிருந்து உருவாகின்றன. போதைக்கு அடிமையானவர்களின் குடும்பத்தினரும், நண்பர்களும் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர். போதைப் பழக்கத்திற்கு அடிமையான நண்பரின் குடும்பத்தினரின் கவனத்திற்கு அனைத்து இளைஞர்களும் இதனைக் கொண்டு செல்ல வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

போதைப்பொருளை உட்கொண்டு மக்கள் தங்கள் வாழ்க்கையை அழித்துக்கொள்ள



வேண்டாம் என்று குடியரசுத் தலைவர் வலியுறுத்தினார். ஏதேனும் மன அழுத்தத்தில் இருந்தால், அவர்கள் தங்கள் நண்பர்கள், குடும்பத்தினர் அல்லது ஏதேனும் சமூக அமைப்புடன் பேச வேண்டும் என்று அவர் கூறினார். நமது மன உறுதியால் எதிர்கொள்ள முடியாத பிரச்சனை எதுவும் இல்லை என்று குறிப்பிட்ட அவர், போதைப்பொருள் பயன்படுத்துதல் மற்றும் போதைப்பொருளுக்கு அடிமையாவதை சமூக விரோதிகள் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்றார். போதைப் பொருள் வாங்குவதற்காக செலவிடப்படும் பணம் குற்றச் செயல்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. போதைக்கு அடிமையானவர்கள் தங்கள் சொந்த நன்மைக்காகவும், சமூகம் மற்றும் நாட்டின் நலனுக்காகவும் இந்தக் கெட்ட பழக்கத்திலிருந்து வெளியே வருவார்கள் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இளைஞர்களே நமது மிக முக்கியமான சொத்துக்கள். அவர்கள் தங்கள் எதிர்காலத்தின் அடித்தளத்தை வலுப்படுத்த செலவிட வேண்டிய நேரமும் ஆற்றலும், போதை காரணமாக வீணடிக்கப்படுகிறது. மாணவர்கள் தவறான திசையில் செல்கிறார்களா என்பதைக் கல்வி நிறுவனங்கள் கண்டறிய வேண்டும். தவறு நடப்பது தெரியவந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் கூறினார்.

# சகல சௌபாக்கியம் தரும் வரலஷ்மி விரதம்!





அஷ்டலட்சுமியரின் அம்சமாக இருந்து கேட்கும் வரங்களை அருள்பவளே வரலட்சுமி. வரலட்சுமி விரதம் இருந்து வழிபட்டால் குறைவில்லாத செல்வம், திருமண வரம், குழந்தை பேறு கிடைக்கும் என்பது நம்பிக்கை.

ஆடி அமாவாசைக்குப் பின்னர் வளர்பிறையில் பௌர்ணமிக்கு முன்பு வரும் வெள்ளிக்கிழமைதான் வரலட்சுமி விரதம் அனுஷ்டிக்கும் நாள். பெரும்பாலும் வரலட்சுமி விரதம் ஆவணி மாதத்திலேயே வரும். அந்த வகையில் இந்த மாதம் ஆகஸ்ட் 25ஆம் தேதி அன்று வரலட்சுமி விரதம் கடைபிடிக்கப்படுகிறது.

இந்த விரதத்தை கடைபிடிப்பதால், தீர்க்க சுமங்கலி வரம் கிடைத்து, ஆயுள், ஆரோக்கியம் கிட்டும். அது மட்டுமலாமல் செல்வ வளம் பெருகும் என்பது நம்பிக்கை. வரலட்சுமி விரதம் இருக்கும் பெண்களுக்கு மாங்கல்ய பலம் நீடிப்பதோடு செல்வம், வெற்றி, குழந்தைப் பேறு, கல்வி உள்ளிட்ட எல்லா வளங்களும் வாழ்க்கையில் கிடைக்கும்.

வரலட்சுமி விரதத்தின் போது, காலையில் ஸ்நானம் செய்து, தீபம் ஏற்றி, பூஜைக்கான அம்மனை நன்கு அலங்கரித்து, அம்மனை அழைத்து பூஜையில் வைக்க வேண்டும். அம்மனை பட்டுத்துணியல் அலங்கரிக்க வேண்டும். வெள்ளை கறுப்பு நிறத்தில் வஸ்திரம் இருக்கக்கூடாது. மஞ்சள் நிறம், சந்தன நிறத்தில் உள்ள வஸ்திரம் கொண்டு அலங்கரித்தால் சிறப்பு. அம்மனை கலசத்தில் வைத்து சக்திக்கு ஏற்றவாறு அலங்கரிக்கலாம்.

அம்மன் அலங்காரம் செய்த உடன் பூஜை முடிந்து கட்டிக் கொள்ளும் மஞ்சள் சரடு தயாரிக்க வேண்டும். நைவீஏத்தியத்திற்கு பூரண கொழுக்கட்டை அப்பம் வடை போன்றவற்றை தயாரித்து, தயாராக வைக்க வேண்டும். பூஜை செய்பவர்கள் பட்டு வஸ்திரம் தான் அவசியம் அணிய வேண்டும்.

சரிகை இருப்பது அவசியம். பூஜைக்கு வரும் சுமங்கலி பெண்களுக்கு வெற்றிலை, பாக்கு,வளையல், ரவிக்கை துணி கொடுத்து ஆசி பெற வேண்டும்.

வரலட்சுமி பூஜை செய்வதற்கு முன்பாக மஞ்சள் பிள்ளையார் பிடித்து, விநாயகர் வழிபாடு செய்ய வேண்டும். வரலட்சுமி நோன்பை கடைபிப்பவர்கள் பெரும் பேறு பெற்றவர்கள் என்று பத்ம புராணம் கூறுகிறது. பெரிய அளவில் செலவு செய்து பூஜை செய்ய முடியாவிட்டாலும், வரலட்சுமி பூஜையை மிக எளிமையாக ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும். தீபம் ஏற்றி, கற்பூரம் ஏற்றி வரலட்சுமியை வழிபட்டாலும் அன்னையின் அருள் பரிபூரணமாக கிடைக்கும்.



# டிஜிட்டல் இந்தியா திட்டத்தை ரூ.14,903 கோடியில் விரிவுபடுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல்

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் கூடிய மத்திய அமைச்சரவை, டிஜிட்டல் இந்தியா திட்டத்தை விரிவுபடுத்த ஒப்புதல் அளித்தது. இதன் மொத்த செலவு ரூ.14,903 கோடியாகும்.

இது பின்வருவனவற்றை செயல்படுத்தும்:

எதிர்கால திறன் திட்டத்தின் கீழ் 6.25 லட்சம் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் மறுதிறன் மற்றும் மேம்பட்ட திறன் கொண்டவர்களாக மாற்றப்படுவார்கள்;

தகவல் பாதுகாப்பு மற்றும் கல்வி விழிப்புணர்வு கட்டம் (ஐஎஸ்இஏ) திட்டத்தின் கீழ் 2.65 லட்சம் நபர்களுக்கு தகவல் பாதுகாப்பு குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

புதிய தலைமுறை ஆளுமைக்கான ஒருங்கிணைந்த மொபைல் பயன்பாடு (உமாங்) தளத்தின் கீழ் 540 கூடுதல் சேவைகள் கிடைக்கும். தற்போது 1,700 க்கும் மேற்பட்ட சேவைகள் உமாங்கில் ஏற்கனவே கிடைக்கின்றன;

தேசிய சூப்பர் கம்ப்யூட்டர் இயக்கத்தின் கீழ் மேலும் 9 சூப்பர் கம்ப்யூட்டர்கள் சேர்க்கப்படும். இது ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள 18 சூப்பர் கணினிகளுடன் கூடுதலாகும்;

செயற்கை நுண்ணறிவு இயக்கப்பட்ட பல மொழி மொழிபெயர்ப்பு கருவியான பாஷினி (தற்போது 10 மொழிகளில் கிடைக்கிறது), 8வது அட்டவனையில் இடம்பெற்றுள்ள அனைத்து 22 மொழிகளிலும் வெளியிடப்படும்;

1,787 கல்வி நிறுவனங்களை இணைக்கும் தேசிய அறிவு வலையமைப்பை (என்.கே.என்) நவீனப்படுத்துதல்;

டிஜிலாக்கரின் கீழ் டிஜிட்டல் ஆவண சரிபார்ப்பு வசதி இனி எம்.எஸ்.எம்.இ மற்றும் பிற நிறுவனங்களுக்கு கிடைக்கும்;

2/3 நிலை நகரங்களில் 1,200 ஸ்டார்ட்அப்களுக்கு ஆதரவு அளிக்கப்படும்;

சுகாதாரம், விவசாயம் மற்றும் நிலையான நகரங்கள் குறித்த செயற்கை நுண்ணறிவின் சிறப்பு மையங்கள் அமைக்கப்படும்.

12 கோடி கல்லூரி மாணவர்களுக்கு சைபர் விழிப்புணர்வு வகுப்புகள்;

கருவிகளை உருவாக்குதல் மற்றும் தேசிய சைபர் ஒருங்கிணைப்பு மையத்துடன் 200 க்கும் மேற்பட்ட தளங்களை ஒருங்கிணைத்தல் உள்ளிட்ட சைபர் பாதுகாப்புத் துறையில் புதிய முன்முயற்சிகள்

இன்றைய அறிவிப்பு இந்தியாவின் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு ஊக்கமளிக்கும், சேவைகளுக்கான டிஜிட்டல் அணுகலை ஊக்குவிக்கும் மற்றும் இந்தியாவின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணு சுற்றுச்சூழல் அமைப்பை ஆதரிக்கும்.

# வெறும் 5 ரூபாய் செலவு செய்யுங்கள்! ஒரே இரவில் சளி அடியோடு நீங்கும்!

வெறும் 5 ரூபாய் செலவு செய்யுங்கள்!! ஒரே இரவில் சளி அடியோடு நீங்கும்!!

பருவ நிலை மாற்றத்தினாலோ அல்லது வேறு சில காரணங்களினாலோ ஜலதோஷம் சளி போன்றவை ஏற்பட்டு விடுகிறது.

இது ஏற்படுவதற்கும் முன் நமது உடலில் சிறு சிறு மாற்றங்கள் உண்டாகும்.

அந்த மாற்றங்கள் தென்படும் பொழுது இந்த பதிவில் வருவது பின்பற்றினால் மேற்கொண்டு சளி ஜலதோஷம் போன்றவை அதிகரிக்காமல் இருக்க வழிவகுக்கும்.

**தேவையான பொருட்கள்:**

வெற்றிலை 1
மிளகு 5
மஞ்சள் 1 சிட்டிகை
கல்லுப்பு - ஒரு சிறிய கல்

**செய்முறை:**

எடுத்து வைத்துள்ள வெற்றிலையில் 5 மிளகு வைத்து சிறிதளவு மஞ்சள் தூள் சேர்த்து ஒரு சிறிய கல் உப்பு சேர்த்து நன்றாக மடித்து எடுத்துக் கொள்ள வேண்டும். பின்பு இதனை நின்று நன்றாக சாப்பிட ஜலதோஷம் போன்றவை நீங்கும்.



அதுமட்டுமின்றி இதனை உமிழ்நீரோடு சாப்பிடுவதால் உண்டாகும் சலியானது வருவது தடுக்கப்படும். மேலும் இதில் இருக்கும் மஞ்சள் கிருமி நாசினியாகவும் பயன்படுகிறது.

இதனை சாப்பிட்டுவிட்டு அடுத்த அரை மணி நேரத்திற்கு தண்ணீர் எதுவும் குடிக்க கூடாது. குறிப்பாக இந்த வெற்றிலையை இரவு நேரத்தில் உணவுக்குப் பின் எடுத்துக் கொள்வதால் நல்ல ஒரு மாற்றத்தை காண முடியும்.



# இந்தியாவில் உள்ள 40 இடங்கள் யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய பட்டியலில் இடம்பெற்றுள்ளன





2014-ஆம் ஆண்டின் தேசிய பாதுகாப்புக் கொள்கையின்படி, மத்திய அரசால் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கான அதன் சொந்த வழிகாட்டுதல்களை இந்தியத் தொல்லியல் துறை (ஏ.எஸ்.ஐ) பின்பற்றுகிறது. இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தின் (ஏ.எஸ்.ஐ) அதிகார வரம்பின் கீழ் 3696 மத்திய பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னங்கள் / தளங்கள் உள்ளன.

தற்போது, யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய பட்டியலில் 40 இடங்களும், யுனெஸ்கோ உத்தேச பட்டியலில் 52 இடங்களும் (2022 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்ட 6 இடங்கள் உட்பட) உள்ளன.

எந்தவொரு இடத்தையும் தற்காலிக பட்டியலில் சேர்ப்பது உலக பாரம்பரிய பட்டியலில் சேர்க்க ஒரு முன் நிபந்தனையாகும். உத்தேசப் பட்டியலை அதிகரிப்பது தொடர்ச்சியான செயல்முறையாகும். யுனெஸ்கோ செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், 2021 இன் படி, கலாச்சார அல்லது இயற்கையான ஒரு இடத்தை மட்டுமே ஆண்டுதோறும் கல்வெட்டு செயல்முறைக்கு பரிந்துரைக்க முடியும். கூடுதலாக, எந்தவொரு தளத்தையும் சேர்ப்பதற்கு அளவுகோல்களை பூர்த்தி செய்தல், நம்பகத்தன்மை மற்றும் ஒருமைப்பாட்டின் நிபந்தனையை நிறைவேற்றுதல் மற்றும் நிலுவையில் உள்ள உலகளாவிய மதிப்பை நியாயப்படுத்துதல் ஆகியவை தேவைப்படுகின்றன.

இந்த பதிலை வடகிழக்கு பிராந்திய கலாச்சாரம், சுற்றுலா மற்றும் மேம்பாட்டு அமைச்சர் திரு ஜி கிஷன் ரெட்டி இன்று மக்களவையில் அளித்தார்.


**பேனா குரல்**
**PENA KURAL**
தமிழ் மாத இதழ்

உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர் :
நா வீ சிவசங்கர்

ஆசிரியர் : ராதிகா. சி, B.E.,

துணை ஆசிரியர்கள் :
துரை. சந்துரு, ந.திவாணன், M.சந்திரசேகர் K.அழகர்சாமி, வீ.அய்யனார், பி.ஸ்டாலின் பா.கார்த்திகேயன், B.நாராயணசாமி, T.சிவக்குமார், M.அறிவுநிதி

தலைமை நிருபர்கள் :
பா.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன், பா.சரவணன், A.தங்கராஜ், K.மாரிதுரை, ம.திலிப் குமார்

நிருபர்கள் :
Ba.சரவணன், தமிழ் மணி, உ.சரவணன், கா.கலைமணி, தி.பாமா, ஜெபசீலன், கு.தீபக், தமிழினி, இளைய தர்ஷினி, P.ஜேசுராஜ், பா.அசோக்குமார், J.தனசேகர், தமிழ் வீரன், கா.சுபுலட்சுமி, அன்பு மணி, R.பிரகாஷ்,

புகைப்பட நிருபர்கள் :
வா.கவியரசன், கா.மிதுன் சாய்

ஓவியங்கள்: வீ.சந்தோஷ் குமார்

சட்ட ஆலோசகர்: G. நாகராஜ், B.Sc., LLB.,

இதழ் வடிவமைப்பு: *Tamilni Printz*

நிர்வாக அலுவலகம் :
**பேனா குரல்**
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு :
044-35906002, 9962245338
info@penakural.com
penakural@yahoo.com
www.penakural.com



* பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களையே சாரும்.
* பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.



Printed, Published and Owned by: **NV SIVASHANKAR** | Printed at **J.M.PROCESS**, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002. | Published at No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078. | Editor: **RATHIKA S**


V.AYYANAR
9884166636
NO.3/885,PILLAYAR KOIL STREET
OMR, METTUKUPPAM
CHENNAI-600097
DEEPSHIKA AUTO WORKS
ALL KINDS OF TWO WHEELERS REPAIRING, WATER WASH SERVICE CENTRE
email: deepshikaautoworks@gmail.com


BM
Electrical, Plumbing
&
Air Conditioner Work
B. MANIKANDAN
9884555002
044 48612123
manikandanb2512@gmail.com
3/885, Pillayar Koil Street,
Mettukuppam, OMR, Chennai - 600097


வள்ளுவன் வாய்மை எப்படி பொய்த்து போகாதோ!
அதேபோன்று விலையும்! தரமும்!
உங்கள் ஸ்ரீதேவி ஏஜென்சிஸ் - ல் பொய்த்து போகாது!
பண்டிகைகால
அதிரடி ஆஃபர்களுக்கும் உண்டு...
ஸ்ரீதேவி ஏஜென்சிஸ்
Pay 50%
BALANCE AMOUNT
DAILY EMI
Wholesale Rate
Retail Shopping
0% Finance Available
Rs.12,999/-
Rs.999/-
Rs.3699/-
Rs.3999/-
Rs.6999/-
Rs.7999/-
Avail Offer Rs.1000/- Advance
MANUFACTURING &
WHOLESALE SUPPLIER
CONTACT
8939406206
No.5, Poonamalli High Road, Near MGR University, Maduravayal, Chennai - 600095.